தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# 1983

# ஜூலை வன்செயல்கள்

## "உண்மையின் தரிசனங்கள்"



மன்றத்தில்

த்தெட்டுவேகம:

JPL
C3354
3354 CC

2
301.633[2]

33541c
KOHA JPL
105836 28-12-1994
யாழ்ப்பாணம்

# செப்டம்பர் 22, 1983:

## அவசரகால நிலைமை பற்றி விவாதத்தில்

**திரு. சரத் முத்தெட்டுவேகம**

சபாநாயகர் அவர்களே, இந்த அவசரகால நிலைமை பற்றியோ, அதை மேலும் நீடிப்பது பற்றியோ அரசாங்கத் தரப்பினர் எதுவித ஆர்வம் காட்டுவதாயில்லை என்றே எனக்குப் படுகிறது. நான் இவ்வாறு கூறுவதற்கான காரணம் யாதெனில், கௌரவ. பிரதமர் அவசரகால நிலைமையை நீடிப்பது பற்றி ஒரு அரைமனத்துடனான வாதத்தையே முன்வைத்திருந்தார். என்பதும் அதைத் தொடர்ந்து அரசாங்கத் தரப்பினர் மத்தியில் ஒரு அசட்டையான மௌனம் நிலவியதையும், இந்த அவசரகால நிலைமையை நீடிக்குமாறு எழுந்து பேசுவதற்கு அவர்களில் ஒருவருக்கேனும் விருப்பமோ, திராணியோ இல்லாமையையும் நாம் காணக் கூடியதாக விருந்தது என்பதுமே.

**திரு. சபாநாயகர்**

எதிர்க்கட்சியினருக்கு ஒரு சந்தர்ப்பத்தினை அரசாங்கம் வழங்கியிருக்கிறது என்றே நான் கருதுகிறேன். உங்களுக்கு ஒரு முழுமையான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. சரத் முத்தெட்டுவேகம**

சபாநாயகர் அவர்களே, நீங்கள் இங்கு வந்த பிறகுதான் போலும்..

**திரு. அனுரா பண்டாரநாயக்கா:**

அதற்குக் காரணம் உங்களுக்கு ஒரு புதிய மத்தியஸ்தர் கிடைத்திருக்கிறார்!

**திரு. சரத் முத்தெட்டுவேகம**

சபாநாயகர் அவர்களே, எவ்வாறாயினும், அரசாங்கத்தின் சார்பில் நீங்கள் ஒரு சாத்தியமான விளக்கத்தை அளித்திருப்பதால், நாம் தற்சமயம் அவ்விளக்கத்தையிட்டு திருப்தியடைவோம். நாம் பேசுவதற்கு வாய்ப்பொன்றினைத் தர அவர்கள் விரும்பியிருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் எங்களுக்குத் தெரியும். இத் தினத்தின் இறுதியில், மூன்றில்

PUBLIC LIBRARY
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
105836 C.C

[stamp]

இரண்டு பெரும்பான்மை அவசியப்படும் வேளையில், அரசாங்கத்தின் வாக்களிப்புக் கருவிகள் அத்தனையுமே இங்கு பிரசன்னமாயிருக்கும். அவர்கள் விவாதங்களுக்குச் செவிமடுத்தார்களோ இல்லையோ அல்லது அவற்றினையிட்டு நம்பிக்கை கொண்டார்களோ இல்லையோ, அவர்கள் இங்கு வராவிட்டால் அவர்களின் ராஜினுமாக் கடிதங்கள் நாளை உங்களை வந்தடையும்; அவர்கள் நாடளுமன்ற உறுப்புரிமையை இழப்பார்கள். அக்கடிதங்கள் இன்றும் அங்குதான் இருக்கின்றன.

**ஒரு உறுப்பினர்:**

நீங்கள் பழைய பல்லவியைப் பாடுகிறீர்கள்.

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

அக் கடிதங்கள் அங்குதான் இருக்கின்றன. ஏனெனில், ஜூனிலோ அல்லது ஜூலையிலோ மாட்சிமிக்க ஜனுதிபதியின் அறிக்கை யொன்றினைப் படித்தேன். அது அவருடையதோ அன்றி வேறு எவரினதோ என்பது எனக்குச் சரியாக நினைவில்லை. ஆகஸ்ட்டுக்குப் பின்னர், அதாவது, அன்றைய நாடாளுமன்றத்தின் தவணை முடிந்த பின்னர், அக் கடிதங்கள் இல்லாதொழிக்கப்படும் என மேற்படி அறிக்கை கூறியது. ஆனுல், அக்கடிதங்கள் அவ்வாறு இல்லா தொழிக்கப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன் (குறுக்கீடு). ஐயா, கௌரவ நாடாளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சரும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவுமானவர் அக்கடிதங்கள் அழிக்கப்பட்டு விட்டனவா? என என்னிடம் வினவுகிருர். இது பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கக் கூடிய ஒருவர் இச் சபையில் இருக்க முடியுமானுல் அவர் நாடாளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சராகவே இருக்க முடியும். அவரது ராஜினுமாக் கடிதம் அழிக்கப்பட்டதா இல்லையா என்பதை அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எது எவ்வாருயினும், நாம் அவசர கால நிலைமை பற்றித் தொடர்ந்து பேசுவோம்.

**திரு. சபாநாயகர்:**

தயவு செய்து ஒழுங்கு! சபை மாலை 5 மணிவரை இடைநிறுத்தப் படுகின்றது.

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

மேலுமொரு மாதம் அவசரகால நிலைமையை நீடிப்பது குறித்து நாம் இப்போது வாதிக்கிறேம். பதினெட்டு புதிய நாடாளுமன்ற

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உறுப்பினர்களைத் தெரிவு செய்த இடைத்தேர்தல்கள் நடைபெற்றதற்
குச் சில நாட்களையடுத்து, மே மாதத்தில் நடைமுறைக்கு வந்த அவ
சரகால நிலைமை பற்றியே நாம் இங்கு வாதிக்கின்றோம். மே மாதம்
முதல் ஜூனிலும், ஜூலையிலும், ஆகஸ்டிலும், இப்போது செப்டம்பரி
லும் நாங்கள் அவசரகால நிலைமையை நீடிப்பது பற்றி பேசுகிறோம்.

கடந்த முறை அவசரகால நிலைமை பற்றி ஆராயப்பட்டபோது,
அவசரகால நிலைப்பிரகடனம் ஒரு முக்கியத்துவமிக்க விவகாரம் என்
றும், இப்போது அது அதன் காத்திரத் தன்மையை இழந்து விட்ட
தென்றும் நான் குறிப்பிட்டேன். இம் முறை, நாம் அவசரகால நிலை
மையைப் பிரகடனஞ் செய்து, அது நடைமுறையிலிருந்த காலத்திலேயே
ஜூலை மாத இனக்கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. அன்றுதொட்டு
இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத்
தீர்வுகாணுவதற்கு பல எத்தனிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன; பல
அறிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால், நாம் கண்டதென்ன? ஜூலைக்
குப் பின்னர் செப்டம்பரும் வந்து கடந்த இருமாத காலத்தில், நில
வரம் தறிகெட்டுப் போவதை அரசு அனுமதிப்பதையே நாம் கண்டு
வந்துள்ளோம். நிலவரம் தறிகெட்டுப் போவது மட்டுமன்றி, அது கட்டு
மீறிப் போவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இன்று, சம்பவங்கள்
நடைபெற்று இரு மாதங்களின் பின்னர், நாட்டிலுள்ள நிலைமை என்ன?

தமிழ் மக்களுக்கு அவர்களின் உயிரும், சுதந்திரமும் உத்தரவாதப்
படுத்தப்பட்டுள்ளனவா? எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு
ளதா? இல்லை. ஏனெனில், அரசாங்கம் நிலைமை கட்டுமீறிப்போக
அனுமதித்து விட்டது.

இன்று, நிலைமை என்ன? ஜூலை 25-ந் திகதிக்குப் பின்னர் நடை
பெற்ற நிகழ்ச்சிகளின் போக்கினைப் பாருங்கள். எல்லாவற்றுக்கும் முத
லாக, மாண்புமிக்க ஜனாதிபதி இந்திய அரசுடன் பேச்சுவார்த்தையை
ஆரம்பித்தார். இதன் விளைவாக, அவரது சகோதரர் திரு. ஹரி ஜய
வர்தன அவரது விசேஷ பிரதிநிதியாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்
கப்பட்டார். பின்னர் அவரதும், அரசாங்கத்தினதும் இணக்கத்துடன்
திருமதி. காந்தி தமது பிரதிநிதி திரு. பார்த்தசாரதியை அனுப்பினார்.

திரு. பார்த்தசாரதி இங்கு மீண்டும் வருவார் என அறிவிக்கப்பட்டுள்
ளது. இப்போது என்ன நடந்துள்ளது? இலங்கையின் உள்விவகாரங்
களில் இந்தியா தலையீடு செய்கிறது என்ற விவகாரம் பற்றி அரசாங்
கத்துக்கு உள்ளேயும், வெளியேயும் ஒரு பெரிய இயக்கமே உருவாகி

யுள்ளது. இலங்கையின் விவகாரங்களில் எந்தவொரு நாடும் தலைப் போடுவதை எவரும் விரும்பமாட்டார்கள். ஆனால், திரு. எச். டபிள்யூ. ஜயவர்தனவின் இந்திய விஜயமும், திரு. பார்த்தசாரதியின் இலங்கை விஜயமும் இரு அரசாங்கங்களும் எடுத்த தீர்மானங்களின் விளைவுகளே என்பதை ஒருவர் மறத்தலாகாது. அரசாங்கத்துக்கு உள்ளே நிலவு கின்ற நிலவரத்தை யாவரும் அறிவார்கள். அரசாங்கத்தினுள் மூன்று அல்லது நான்கு கோஷ்டிகளும், இவ்விவகாரத் தொடர்பான சித்தாந்த அடிப்படையில் மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலுமான அபிப்பிராயப் பேதங்களும் இருக்கின்றன. அரசாங்கத்தினுள் அதிகாரத்தைக் கைப் பற்ற முயலும் வேறு சிலரின் முயற்சிகளுக்கு ஈடாக அரசாங்கத்திலுள்ள தமது நிலைகளையும், பிடிகளையும் இறுக்கிக் கொள்ள சிலர் இவ்விகாரத் தைப் பயனபடுத்துகின்றனர்.

இதன் பின்னணியிலுள்ள உண்மையான பிரச்சினை இதுதான். ஒரு தேசிய ரீதியில் இப்பிரச்சினையை நோக்கத் தவறிய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் இவ்விவகாரத்தை தனிப்பட்ட கருத்து நிலை ரீதியிலும், ஒரு தீவிர பேரினவாத போக்கினைப் பின்பற்றுவதன் மூலம் தங்கள் கரங்களை வலுப்படுத்திக் கொள்ளுகின்ற ரீதியிலும் நோக்குகி றார்கள் என நான் நேரடியாகவே குற்றஞ் சாட்டுகிறேன். அரசாங் கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய ஆதரவுத் தளத்தையும், தர்பாரையும் கட்டி வளர்க்கும் நோக்குடன் இனவாதம் கக்குவதில் ஒருவருடன் ஒருவர் போட்டி போடுகின்றனர். இவ்வாறான நிலைமைக்கே நாம் இன்று முகம் கொடுத்து நிற்கின்றோம்.

ஐயா, திரு. பார்த்தசாரதியின் விஜயம் பின் போடப்பட வேண் டுமென மாண்புமிக்க ஜனாதிபதி திருமதி. காந்திக்கு தகவலனுப்பியது ஏன்? நானே ஆரம்பித்து வைத்த இப்பேச்சுவார்த்தைத் தொடர் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டம் முடியும் வரை பின்போடப்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டது ஏன்?

இதற்கும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்துக்கும் எதுவித சம்பந்த மும் இல்லை; நியூயார்க்கில் எதுவும் நடக்கப் போவதுமில்லை. இதற்கான காரணம் யாதெனில், பார்த்தசாரதி விஜயத்தையும், இலங்கையின் விவ காரங்களில் இந்தியா கைவைப்பதுஎன்று சுட்டிக்காட்டப் பட்டுவரும் அலுவலுக்கும் அனுமதி அளிக்கக் கூடாதென அரசாங்கத்துக்குள்ளே இருக்கும் சில கோழ்புகள் அவரை நிர்ப்பந்தித்தமையே. அரசாங்கம் இப்பிரச்சினைக்கான ஒரு சமாதான பூர்வமான தீர்வினை விரும்புகிறதா? அல்லது அது நீடித்த ஒரு யுத்தத்தை நடத்த விழைகிறதா? பலர்

கூறியதையும் பலவாறாக மேற்கோள் காட்டி பல அறிக்கைகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வெளி வந்துள்ளன. உமா மகேஸ்வரனதும் பிரபாகரனதும் பேச்சுக் களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டு வருகின்றன. அவர்கள் ஈழத்துக்கான போராட்டத்தைத் தொடர்ந்தும் நடாத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்பட்டு வருகின்றது. அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களின் பெரும் பிரிவினரோடு ஒரு தீர்வுக்கு வருவதற்கான வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன.

இத் தீர்வினை ஈட்டுவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அரசாங்கம் நழுவிப் போக விட்டது. 1977ல், ஒரு சர்வகட்சி மகாநாட்டினை நடாத்தப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களித்தது. அதை நாம் பூரணமாக ஆதரித்தோம். ஏனெனில், அனைத்துக் கட்சிகளினதும் இணக்கப் பாட்டின் வாயிலாகவே ஒரு கட்சியால் அல்லது பிறிதொரு கட்சியால் காண முடியாத ஒரு காத்திரமான தீர்வினைக் காண முடியும். இப்போது, அரசாங்கம் இப் பிரச்சினை பற்றி நிஜத்தில் சிரத்தை கொண்டுள்ளதானால், அதற்கு இதைவிடச் சிறந்த வாய்ப்பு இல்லை. அரசாங்கம் மக்கள் பேரலையுடனும் மக்களினது பேராதரவு, நல்லெண்ணம் ஆகியவற்றின் பின்னணியுடனும் பதவிக்கு வந்தது. ஆனால், வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ, அரசாங்கம் இந்த வாய்ப்பினை நழுவிப்போக விட்டுள்ளது.

1977 முதல் 1983 வரை நடைபெற்றதை நாம் மறந்து விடுவோம். 1983ல், ஜூலை மாதத்தில் எங்கள் முன் இக்கொடுமையான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாம் இப்படியே போய்க் கொண்டிருக்க முடியாது என்பதைச் சரியாகச் சிந்திக்கத் தெரிந்த எல்லோருமே உணர்ந்துள்ளனர். 1983 ஜூலை சம்பவங்களை தமிழ் மக்களை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு மக்கள் தீர்ப்பாகப் பயன்படுத்த முடியாது; அவற்றை, அவற்றையொத்த சம்பவங்கள் நடைபெறுவதை தவிர்ப்பதை நோக்கிக் கொண்ட ஒரு அறிபூர்வமான தேடுதலுக்கான இந்நாட்டின் இரு பெரும் இனங்களுக்கிடையில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான — ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்த இணக்கப்பாடின்றி உங்களால் ஒரு திறந்த பொருளாதாரத்தையோ, ஒரு பூட்டிய பொருளாதாரத்தையோ அல்லது ஒரு முதலாளித்துவ பொருளாதாரத்தையோ ஒரு சோஷலிஸ பொருளாதாரத்தையே பேண முடிந்தாலும், முக்கிய தேசிய இனங்கள் மத்தியிலான ஐக்கியப் பாடின்றி உங்களால் எதுவித முன்னேற்றத்தையோ, எதுவித சித்தாந்த வளிப்பட்ட

KOHA JPL



சாதனைகளையோ சாதிக்க முடியாது: எனவே, நீங்கள் ஏன் இவ்வாறான சந்தர்ப்பம் நழுவிச் செல்ல விடுகின்றீர்கள்? இந்தியாவின் முயற்சிகள் சில பயன்களைத் தரமுடியும் என நாம் கூறுவதன் காரணம் யாதெனில், நாம் இன்றைய அரசியலின் எதார்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். தமிழ் மக்களில் பெரும் பிரிவினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகள் தமிழ் பிரதேசங்களுக்குச் சென்று நாம் கொண்ட உடன்பாட்டினை நியாயப் படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற உண்மையை நாம் அங்கீகரிக்க வேண்டும்.

அவர்கள் அதை எப்படிச் செய்ய முடியும்? இந்திய அரசினையோ அல்லது சில இந்திய நண்பர்களையோ பொறுத்தளவில் இதற்கான சிறந்த மார்க்கம் என்னவெனில், ஏதாவது ஒரு உடன்பாடு அத்தியாவசியம் என்பதை அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் உணரவைப்பதே எமது இணக்கத்துடன் இது நடைபெறும் பட்சத்தில், இது எமது விவகாரங்களில் தலையீடு செய்வதற் கொப்பாகாது. இவ்விதமான ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கம் நழுவ விடுமாயின், அது ஒரு பெருங்குற்றமாகும். ஏனெனில், இதை நழுவ விடுவதால், பின்னர் தீர்வு என்று எதுவும் ஏற்படப் போவதில்லை. வேறு மார்க்கமின்றி யாழ்ப்பாணத்தில் இராணுவரீதியில் முற்றுகையிடுவதற்கும், கெரில்லாப் படைகளுடன் தொடர்ந்து மோதுவதற்கும் வகை செய்யக் கூடிய ஒரு சூழலே உருவாகும். இப் பிரச்சினை பற்றிப் பேசவும், தீர்வு காணவும் திராணியற்ற உங்கள் கையாலாகாத் தனத்தாலேயே இவ்வாறான சூழல் உருவாகும். இந் நாட்டில் பேரினவாதிகளின் போக்கினுக்கு தலைசாய முடியாது.

சிங்களரோ அன்றித் தமிழரோ அவ்வாறு செய்யக் கூடாது. நாம் அரசாங்கத்தையும், இந் நாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பையும், இந் நாட்டின் எதிர்காலத்தையும் பற்றிக் கரிசனை கொண்டவர்களாயின், இரு தரப்புகளும் – அரசாங்கமும், தமிழ்த் தலைமையும் இதர கட்சிகளுடன் கூட்டாகக் கூடியமர்ந்து இந் நாட்டின் நிலையான அமைதிக்கு வகை செய்யக் கூடிய ஒரு தீர்வினைக் கண்டாக வேண்டும். இன்றுள்ள நிலைமை என்ன? திரு. தொண்டமான் தனது அமைச்சரவைக்கு எதை அறிக்கை செய்கிறார் என்பது எனக்குத் தெரியாது. நடுப்புல பிரதேசத்திலும், கீழ்ப்புலப் பிரதேசத்திலுமுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் பிரஜாவுரிமை உள்ளவர்கள், இல்லாதவர்கள் – அனைவருமே இந்தியாவுக்குச் செல்ல எந்த ஒரு மார்க்கத்தையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தான் அனுபவரீதியாக அறிந்து கொண்டுள்ளேன்.

105836



இந்தியாவின் இரு சஞ்சிகைகள்-பரவலாக வாசிக்கப்படும் 'இந்தியா ருடே' பம்பாயிலிருந்து வெளிவரும் 'ஜன்டில்மன்' ஆகிய சஞ்சிகைகள்-இந்தியாவில் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றினை நடாத்தவென இரு நிறுவனங்களை அமர்த்தின, 'ஜன்டில்மன்' சஞ்சிகைக்காக 'மிருக்' என்ற நிறுவனமும் 'இந்திய ருடே' சஞ்சிகைக்காக 'மிருஸ்' என்ற நிறுவனமும் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பினை நடாத்தின.

வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் பல மட்ட மக்கள் மத்தியில் இவ்வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இவ்வாக்கெடுப்பின் போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மக்கள் அளித்த பதில்கள் இலங்கை நிகழ்ச்சிகளைப்பொறுத்து இந்திய பொதுமக்கள் கொண்டுள்ள கருத்தினை நன்கு பிரதிபலிப்பனவாக அமைந்தன. 'இந்திய வம்சாவழி மக்கள் இந்தியாவுக்குத் திரும்புவதை விரும்புகிறீர்களா?' என்ற ஒரு கேள்விக்குப் பதிலளித்தவர்களில் 70 சத வீதத்துக்கும் மேற்பட்டோர் இந்திய வம்சாவழி மக்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுவதைத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்தனர்.

இப்போது, அரசாங்கத்தின் நிலை என்ன? உங்களுக்கு இந்திய வம்சாவழி மக்கள் வேண்டுமா? இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்களும் வறியவர்களிலும் மிக வறியவர்களாக இருப்பவர்களுமான இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களையே தான் இங்கு குறிப்பிடுகின்றேன். அல்லது, அவர்கள் மீண்டும் இந்தியா செல்லுவதை விரும்புகிறீர்களா?

இதுதான் அரசாங்கத்தில் நிலையென்றால், அரசாங்கம் இந்த ரீதியில் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். அவ்வாறாயின், சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை உதறித்தள்ளிவிட்டு இந்தியர்களின் நிலவரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்துங்கள். அல்லது, அவர்கள் இங்கு இருக்கவேண்டுமென விரும்பும் பட்சத்தில், அவர்களின் உயிர்ப் பாதுகாப்பை நீங்கள் உத்தரவாதஞ் செய்யுங்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமையுள்ள பல தோட்டத் தொழிலாளர்களை நான் இரத்தினபுரி மாவட்டத்தில் சந்தித்து உரையாடினேன். 'உங்களுக்குத்தான் பிரஜாவுரிமை இருக்கிறதே - நீங்கள் ஏன் இந்தியா செல்ல விரும்புகிறீர்கள்?' என நான் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்; 'நாங்கள் பல தடவைகள் தப்பிப் பிழைத்து விட்டோம் அடுத்த முறையும் தப்பிப் பிழைப்போம் என்று இப்போது உத்தரவாதம் இல்லை'. இவ்விஷயத்தில் அரசாங்கத்தின் நிலை

என்ன என்பதை தான் அறிய விரும்புகிறேன். இச்சபைக்கு வந்து மாதந் தோறும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவது மட்டும் போதாது. சாதாரண சட்டங்களின் கீழ் எந்தவொரு நிலைமையையும் சமாளிக்கக் கூடிய ஆற்றலும் அதிகாரமும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் நீங்கள் செய்வதெல்லாம் இங்கு வந்து அவசரகால நிலைமையை நீடிக்கும்படி கோருவதும் யாரோ சுடப்பட்டார், ஏதோ ஒரு பஸ் தீக்கிரையாக்கப்பட்டது என்ற ரீதியில் பேசுவதுமே இது தொடர்ந்து நடைபெறப் போகிறது. நான் இதை முன்பே கூறியிருந்தேன்.

தமிழ்ப் பிரதேசத்துக்கும் சிங்களப் பிரதேசத்துக்கு மிடையில் எல்லையை வகுப்பதும், அங்கு எல்லைக் காவலர்களை நிறுத்துவதும் மட்டுமே இன்னும்பாக்கி இருக்கிறது என எண்ணுமளவுக்கு சைப்பிரஸைப் போன்ற ஒரு நிலவரத்தை நீங்கள் உருவாக்கி விட்டீர்கள். இவ்வாறான ஒரு நிலைமையையா நீங்கள் விரும்புகிறீர்கள்? மக்களுக்கு அச்சமின்றி நடமாடக்கூடிய சுதந்திரம் இருக்க வேண்டும் என அரசாங்கப் பிரமுகர்கள் அடிக்கடி கூறி வந்துள்ளனர். அவர்கள் சுதந்திரமாக நடமாட முடிகிறதா? எதிர் காலத்திலாவது அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதை நீங்கள் உத்தரவாதப் படுத்துவீர்களா?

தமிழ் நிர்வாக அலுவலர்களை 45வது வயதில் ஒய்வு பெற அனுமதிப்பது தொடர்பான ஒரு யோசனை பற்றிய செய்தியொன்றினை நான் இன்று பத்திரிகைகளில் படித்தேன். ஏன் இந்த நடவடிக்கை? அவர்களின் தொழில் ஸ்தலங்களில் அவர்களின் பாதுகாப்பினை உத்தரவாதப் படுத்த முடியாத உங்களது கையாலாகாத்தனத்தை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள் அதனால், அவர்களுக்கு பூரண பென்ஷனும் கொடுத்து "தயவு செய்து 45வயதுடன் ஒய்வு பெற்றுக் கொள்ளுங்கள்" என நீங்கள் சொல்லுகிறீர்கள். இது தான் நிலைமை.

அதனால்தான் நான் அரசாங்கத்துக்குச் சொல்லுகிறேன்: 'இவை பாதுகாப்புப் பிரமணங்கள் தயவு செய்து அவற்றை நிறைவேற்றுங்கள். அப்படியானால் நாம் உங்களுக்குப் பாதுகாப்பைத் தருவோம்' என நீங்கள் இங்கு வந்து சொல்வதுமட்டும் போதாது. தீவிர, இந்த அரசாங்கம் அவசரகால நிலைப் பிரகடனத்தை விரும்பாத ஒரு அரசாங்கம் இது என்பதை நீங்கள் மறத்தலாகாது. அவசரகால நிலையை நீடித்தமைக்காக முன்னைய பிரதமரின் குடியியல் உரிமைகளை ஏழாண்டுகளுக்கு பறித்தது இந்த அரசாங்கமே என்பதையும் நினைவில் வைத்திருங்கள். எனவே, அவ்வாறான ஒரு சூழலில், அவசரகால நிலைப் பிரகடனத்தை நிறை

வேற்றுமாறு நீங்கள் எம்மைக் கேட்கும் போது நீங்கள் அவசரகால நிலைப் பிரகடனத்தை எவ்வாறு பயன்படுத்தியுள்ளீர்கள் என்பது பற்றிய தெளிவான அறிக்கையையும், அது ஏன் அவசியம் என்ற விளக்கத்தையும், அதன் கீழ் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும் எங்களுக்கு விளக்க வேண்டும். அதற்குப் பதிலாக, நான் முன்னர் குறிப்பிட்டது போல, நீங்கள் சும்மா நழுவிக் கொள்கிறீர்கள்.

திரு. பார்த்தசாரதியை வருமாறு நீங்கள் கேட்கிறீர்கள். பின்னர் ஒரு கோழ்பு உள்ளே சென்று "இந்தியர்களை இங்கு வருவிக்க வேண்டாம்" எனக் கூறுகிறது. அதன் பின்னர் "உங்கள் விஜயத்தை ஒத்திப் போடுங்கள்" என அவருக்குக் கூறுகிறீர்கள். "இது ஒத்தி வைப்பு அல்ல; இதுதான் விஜயத்தின் முடிவு" என இந்தியப் பத்திரிகைகள் எழுதுகின்றன. அடுத்து ஒரு தொடர்ந்த யுத்தம் இருந்து வரப் போகிறது.

முறையான பந்தோபஸ்தின்றி எவருக்கும் யாழ்ப்பாணம் செல்ல முடியாதிருக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு இங்கு வர முடியாதிருக்கும். நாங்கள் எவ்வாறு இந்த நாட்டினை நடாத்தப் போகிறோம் என நான் கேட்கிறேன். இதனால் தான், இவ்விஷயம் பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது என்பதை அதனது தரப்பிலிருந்து ஒருவர் வாயிலாகவேனும் எமக்கு அறியத்தர வேண்டும் என நான் கேட்கிறேன். இவ்விஷயம் பற்றி நான் கூற விழைவது அவ்வளவே.

இப்பொழுது, வேறு பல விஷயங்களும் இருக்கவே செய்கின்றன. அரசாங்கத்தின் விட்டேற்றியான தன்மையைப் பொறுத்தளவில், நான் சொல்லக் கூடியதெல்லாம் நான் ஏற்கனவே குறிப்பிட்ட சஞ்சிகையில் வெளிவந்த ஒன்றை மட்டுமே. 'இந்தியா ருடே' சஞ்சிகை, அதனது கடந்த மாதத்துக்கு முந்திய இதழில், எயர் லங்காவைச் சார்ந்த கப்டன் றகித்த விக்கிரமநாயக்க லண்டன் சென்றதாயும் அங்கு றெபேர்ட் மார்க்ஸ் என்ற மாஜி பொலிஸ் கமிஷனரால் நடாத்தப்படும் "அஸெட்ஸ் இன்டர் நாஷனல்" என்ற கம்பனியுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தியதாயும், மாண்புமிக்க ஜனாதிபதிக்கான பாதுகாப்புச் சேவைகளை ஒன்றிணைத்து நடாத்துவதற்கென இரண்டு அந்தரங்க பந்தோபஸ்து உத்தியோகத்தர்களை அழைத்து வந்ததாயும் செய்தி வெளியிட்டுள்ளது.

KOHA
JPL
KOHA
JPL



இது உண்மையா என நானறியேன். ஆனால், இப்படித்தான் அச் செய்தி கூறுகிறது. அது விபரபூர்வமான ஒரு செய்தியறிக்கை. சில சமயங்களில், இவ்வாறான செய்தியறிக்கைகள் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகுவதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். இதனால்தான், கௌரவ. ராஜாங்க அமைச்சர் உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், இது தொடர்பாகச் சில சட்டங்களைக் கொண்டுவரப் போவதாகவும் கூறியுள்ளார். இவ் விஷயம் பற்றிப் பின்னர் பேசுகிறேன்.

ஆனால் இதன் அர்த்தம் என்ன? உங்கள் வசம் ஒரு சி. ஐ. டி. பிரிவுண்டு; இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியன உண்டு ஆனால், ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்கு ''அஸெட் இன்டர்நாஷனல்'' நிறுவனத்திலிருந்து நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனக்கு இது ஒரு அரசாங்கமாகப் படவில்லை. ஐயா, இது ஒரு கோமாளிக் கூத்தாக உள்ளது. ஏயர் லங்கா விவகாரங்களைக் கவனிப்பதைக் கடமையாகக் கொண்ட றகித்த விக்கிரமநாயக்கா ''அஸெட்ஸ் இன்டர் நாஷனலை''ச் சார்ந்த தனியார் நிறுவனத்திலிருந்து இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களைக் கொண்டு வந்திருக்கிறார். இவையாவும் உண்மையா? இல்லையா? என நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன்.

அடுத்து ஐயா, திருகோணமலைப் பிரச்சினையைப் பற்றிய உங்கள் கருத்து என்ன என நான் கேட்க விரும்புகிறேன். இப் பிரச்சினையை நாம் பல தடவைகள் எழுப்பியுள்ளோம். சில சோஷலிஸ நாடுகளுக்கும் சோவியத் யூனியன் ஜெ. ஐ. கு. ஆகியவற்றுக்கும் எதிராக பிரசாரமும் இந் நாடுகளுடனான ராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் ஒரு வெளிநாட்டுக் கரம் பற்றிய கதையுடன் தீவிரம் பெற்றுள்ளன. இதன் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகவா இவையெல்லாம் செய்யப்படுகின்றன? திருகோணமலையை நோக்கி நீளுகின்ற இன்னுமொரு அந்நியக் கரத்தை நீங்கள் காண முடியாதவராய் இருந்தால், சாக்குப் போக்குத் தேடுபர்களிடம் ஏதாவது பிசகு இருக்கவேண்டும்.

இச் சம்பவங்களுக்குப் பின்னர் நாடு திரும்பிய அமெரிக்கத் தூதுவர் திரு. ஜோன் ரீட் ஒரே தினத்தில் நான்கு தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்தார் என்பதும், அதன் பின்னர் பாகிஸ்தானிய முதல்வர் திரு. ஸியா அல் ஹக்கிடம் அரசாங்கம் உதவி கோரியது என்பதும், பாகிஸ்தான் சர்வதேசச் சிக்கல்களை உணர்ந்து இந்த உதவியை வழங்க

வில்லை என்பதும் உண்மையா? இல்லையா? என நான் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்: பாகிஸ்தானுக்கும் ஒரு புறத்தில் ஆப்கானிஸ்தான், மறுபுறத்தில் இந்தியா. திரு. ஜோன்ரீட்டின் ஆலோசனைக்கமைய நிங்கள் துருப்புக்களை அனுப்புமாறு திரு. ஸியா அல் ஹக்குடன் தொலைபேசியில் உதவி கோரியபோது. அவர் அதற்குப் பதிலாக இந்தியாவுடன் தொடர்பு கொண்டார். இவை யாவும் இந்திய சஞ்சிகைகளில் மிக விவரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

ஆக, இதுதான் உண்மை நிலைமை. இந்த அவசரகால நிலைமை விஷயத்தைப் பொறுத்தளவில், எதைச் சமாளிக்க இந்த அவசரகால நிலை நீடிக்கப்பட வேண்டும் எனக் கோருகிறீர்களோ என்பது கடவுளுக்கே வெளிச்சம். இன்று இருக்கக் கூடிய நிஜமான நிலவரத்தைப் பொறுத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது. அரசாங்கம் எதிலும் சிரத்தை காட்டுவதாக நான் கருதவில்லை. நான் இதை ஒரு தனிப்பட்ட ரீதியில் கூறவில்லை—ஆனல், ஜூலை 25-ந் திகதி இச் சம்பவங்கள் யாவும் நிகழ்ந்தன; 26-ந் திகதியில் இலங்கை வெளிநாட்டமைச்சர் இனவாதம் பற்றிய ஒரு மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு ஜெனீவா சென்றிருக்கிறார். இங்கு, சிங்களவர்களும் தமிழர்களும் வீதிகளில் சண்டை பிடிக்கிறார்கள், உடல்கள் பற்றியெரிகின்றன, வீடுகள் தகருகின்றன, தொழிற்சாலைகள் சரிகின்றன. இந் நிலையில், வெளிநாட்டமைச்சர் இனவாதம் பற்றிய மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கிறார்! அதிஷ்டவசமாக அவர் ஜெனீவா போய்ச் சேரவில்லை. லண்டனிலோ பாரிஸிலோ தங்கி விட்டார்.

இனவாத மகாநாடுக்கு அவர் சென்றிருந்தால் அவரையும் ஒரு சாட்சியமாக தஸ்தாவேஜுகளுடன் சேர்ந்துக் காட்டியிருப்பார்களோ என்னவோ. நிஜத்தில், இது ஒரு சிரத்தைபாவம் கொண்ட அரசாங்கமா? 25-ந் திகதி இங்கு எத்தனையோ எல்லம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, வெளிநாட்டமைச்சர் ஜெனீவாவில் இனவாதம் பற்றி ஆராயும் மகாநாட்டுக்குச் செல்கிறார்! இந்த அரசாங்கத்தின் மனோபாவம் இத்தகையதே.

ஐயா, நான் பிறிதொரு விஷயம் பற்றி இங்கு பேச விரும்புகிறேன். அவசரகால நிலைமையின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள், நீங்கள் தடைசெய்த அரசியல் கட்சிகள், நீங்கள் தடைசெய்த பத்திரிகைகள் ஆகியன தொடர்பான பிரச்சினை இது. ஜூலை 30-ந்

திகதி தேசிய வானொலி, தொலைக்காட்சி சேவைகள் வாயிலாக உரை நிகழ்த்திய பின்னர், ஒரு மிகவும் பூராயமான நிலைமை உருவாகியது. ஜனாதிபதி தமது உரையில் அரசியல் கட்சிகளைப் பற்றி ஒரு வார்த்தையேனும் குறிப்பிடவில்லை. 30–ந் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவலங்கா சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று அரசியல் கட்சிகளும் தடை செய்யப்பட்டன. ஜூலை 31–ந் திகதி இரவு 8 மணியளவில் சிலர் கைது செய்யப்பட்டனர்.

அவசரகாலப் பிரமாணங்களினது 17வது பிரிவின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர். தேசிய பந்தோபஸ்துக்கு ஹானி விளைவிக்கும் வகையில் செயல்படுவதிலிருந்து ஒருவரைத் தடை செய்யும் நோக்குடன் அவரைக் கைது செய்யும் உரிமையை 17வது பிரிவு பாதுகாப்பமைச்சின் செயலாளருக்கு வழங்குகிறது. இது ஒரு விசித்திரமான ஏற்பாடு. ஏனெனில், 17வது பிரிவின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் ஒரு குற்றவாளியோ அல்லது சந்தேக நபரோ அல்ல. அவர் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஒருவரே. 18வது பிரிவின் கீழ், பொலீஸ் மா அதிபரோ இராணுவ அல்லது கடற்படை அதிகாரியோ அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரோ தான் குறிப்பிட்ட ஒரு நபர் குற்றமிழைக்கப் போகிறார் எனச் சந்தேகிக்கு மிடத்து அந்நபரைக் கைது செய்யும் அதிகாரம் பெறுகிறார். 18வது பிரிவின் கீழ் அவ்வாறு கைது செய்யப்படும் ஒருவர் ஒரு சந்தேக நபராவர். 17வது பிரிவின் கீழ், தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பல உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு தற்சமயம் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டிருப்பவர்களில் தடை செய்யப்படாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினைப் போன்ற கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் நீர்கொழும்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நான் சிறை அதிகாரிகளைப் பற்றி எதுவும் சொல்ல வரவில்லை. ஏனெனில் சிறை அதிகாரிகளால் எதுவும் செய்ய முடியாது. எனக்குத் தெரிந்த மட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரையில் சிறை அதிகாரிகள் மனிதாபிமான விதத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழுவினது நான்கு உறுப்பினர்கள் வேறு 11 பேருடன் ஒரு சிறிய அறையில் வைக்கப்பட்டுள்ளனர். பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில், 30 நாட்களுக்குப் பின்னர், இவர்களின் குடும்பங்களிலிருந்து ஒவ்வோர் உறுப்பினர் இவர்களை வாரமொரு முறை சென்று பார்ப்பதற்கு நாம் அனுமதி பெற்றோம். 1983 செப்டம்பர் 1–ந் திகதி வரை, கலவரங்களில் இவர்களுக்கு இருக்கக்கூடிய சம்பந்தம் பற்றி சி. ஐ. டி. பிரிவின் பெரும் பொறுப்புணர்வுடனும் கருத்தாகவும் விசாரணைகளை நடாத்தினர்.

அதன் பின்னர் ஜூலை மாத இறுதியில் நடைபெற்ற இனக் கலவரங்களில் கட்சி என்ற ரீதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது அதனது அரசியல் குழுவின் நான்கு உறுப்பினர்களோ அவ்விதத்தில் ஈடுபடவில்லை என சி. ஐ. டி. ஒரு அறிக்கையை அனுப்பி வைத்தது. இதை மறுக்க முடியுமானால் மறுக்கும் படி எந்தவொரு அரசாங்க அமைச்சரையும் நான் கேட்கிறேன். உண்மையான அறிக்கை அதுவே. நீங்கள் தொடர்ந்தும் கம்யூனிஸ்ட் கட்சி மீது தடைவிதித்திருப்பது ஏன்? அதற்கு நடைபெற்ற சம்பவங்களுடன் எதுவித தொடர்பும் இல்லை என்பதே பொலீஸார் சமர்ப்பித்துள்ள அறிக்கையாகும். தமக்கு எதிராக ஒரு துளி சாட்சியாவது இல்லாத ஒரு நிலையில் கட்சியின் நான்கு முக்கிய உறுப்பினர்கள் இன்று வரை 54 நாட்களாகச் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். எதற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

மூன்று கட்சிகளினதும் நடவடிக்கைகளையும் ஆராய்வதற்காக இளைப்பாறிய சுப்ரீம் நீதிமன்ற நீதிபதி திரு. விக்டர் பெரேராவை அல்லது திரு. சிட்னி. டீ. சொய்ஸாவை நியமிப்பது பற்றி நீங்கள் யோசித்து வருவதாக கடந்த வாரம் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இது, ஒருவர் தான் கேட்க விரும்புவதை மட்டுமே சொல்லக் கூடிய சோதிடர் கிடைக்கும் வரை பல சோதிடர்களைத் தேடிய கதை போல உள்ளது. குற்றப் புலனாய்வு இலாகா போன்ற ஒரு தகுதி வாய்ந்த விசாரணை நிறுவனத்தைக் கொண்டு நீங்கள் ஒரு விசாரணையை நடாத்தி முடித்திருக்கிறீர்கள். 'அவர்களுக்கு இதில் சம்பந்தமில்லை' என சி. ஐ டி. சொல்லி விட்டது. நீங்களோ, 'இது போதாது; நாங்கள் இன்னுமொரை விட்டு விசாரித்துப் பார்ப்போம்' என்று சொல்லுகிறீர்கள். அவர் கூட இதே போலச் சொன்னால், நீங்கள் வேறொருவரிடம் போகிறீர்கள்

'நான் ஒரு சிறிய தொடர்பை — அந்நியத் தொடர்பு அல்லது உள்நாட்டுத் தொடர்பு இருப்பதைக் கண்டு பிடித்து விட்டேன். அவர்களுக்கு இந்த சம்பவங்களில் சம்பந்தம் இருக்கிறது' எனக் கூறக் கூடிய ஒருவர் உங்களுக்குக் கிடைக்கும் வரை நீங்கள் இப்படியே போய்க் கொண்டிருப்பீர்கள். அப்படி ஒருவர் அகப்பட்டதும், 'ஒரு விசாரணைக் கமிஷனை ஆரம்பித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடருங்கள்' என நீங்கள் கூறுவீர்கள். இதுதானா இப்போது நடைபெறுகிறது? அவசரகால நிலைமையின் கீழ் உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக நீங்கள் நினைத்தபடி கட்சிகளுக்குத் தடைவிதிக்க முடியாது. நீங்கள் ஏதாவது ஆதாரத்தை, சிறிதளவு ஆதாரத்தைக் கூடக் காட்டியாக வேண்டும். ஆனால் உங்களிடம் எதுவித ஆதாரமும் இல்லை.

என்னிடம் ஒரு சுவாரஸ்யமான வினாக்கொத்து உள்ளது. பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரைச் சந்தித்து உரையாடும் நிர்வாக சேவை ஊழியர்கள், கைதிகளிடம் கேட்க வேண்டிய வினாக்கள் இவ்வினாக் கொத்தில் அடங்கியுள்ளன. இவ்வினாக் கொத்து 'மிகவும் அந்தரங்கம்' என் முத்திரை குத்தப்பட்டுள்ள ஒன்றாகும். ஆனால் இலங்கையில் தான் அந்தரங்கம் என எதுவும் இல்லையே அதனால் தான் இவ்வினாக்கொத்து எமது கைகளுக்கும் வந்தது. கொள்ளையடித்தமை, ஊரடங்குச்சட்ட மீறுதல்கள் முதலானவற்றுக்காகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் சில இவை: 'நீங்கள் இறுதியாக உங்கள் வாக்கைப் பதிவு செய்த வாக்குச் சாவடி எது?', 'வாக்காளர் பட்டியலில் உள்ள பிரகாரம் உங்கள் வீட்டின் பிரதான குடியிருப்பாளரின் பெயர் என்ன?', 'இந்த வருட மேதின ஊர்வலங்களில் நீங்கள் பங்கு பற்றினீர்களா?' 'அப்படியானால், எந்தக் கட்சிக்கு ஆதரவாக?' 'நீங்கள் ஏதாவது அரசியல் கூட்டங்களில் பேசியுள்ளீர்களா?'–இவ்விதமான கேள்விகளுக்கும் தற்போதுள்ள பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? 1971-ம் ஆண்டின் கிளர்ச்சி தொடர்பான தனிப்பகுதியொன்று இவ்வினாக் கொத்தில் உண்டு. அடுத்து, காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் அவர்களது சிறைக் கூட இயக்கத்துடன் படம் பிடிக்கப்படுகின்றனர். இப்புகைப்படங்களை அவர்களின் உடையில் தொங்கவிட்டு, எந்த 'போஸி'லும் மீண்டும் அவர்கள் படம் பிடிக்கப்படுகிறார்கள். வினாக்கொத்து பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் கையொப்பமிட்ட பின்னரும் அவர்கள் படம் பிடிக்கப்படுகின்றனர்.

நான் கேட்க விரும்புவதெல்லாம் இதுதான்: கைது செய்யப்பட்டவர்களை எந்த அடிப்படையில் விடுதலை செய்வது என்ற திட்டவட்டமான முறையேதும் அரசாங்கத்தின் வசம் இல்லை. நான் ஒரு சிறைக்கூடத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்கிறேன். கொழும்பு மத்தி, பொரளை. கொழும்பு தெற்கு, கம்பஹா, களுத்துறை ஆகியன உட்பட நாட்டின் பல்வேறு மாவட்டங்களையுஞ் சார்ந்தவர்கள் நீர்கொழும்புச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். பெயர்களைக் கூற நான் விரும்பவில்லை; ஆனால், அரசாங்கத்துடன் சம்பந்தமுள்ள முக்கிய அரசியல் பிரமுகர்கள் இச்சிறைக்கூடத்துக்கு நேரடியாகவே சென்று சிலரைக் காவலிலிருந்து மீட்டுச் சென்றுள்ளனர்.

இவ்விஷயத்தில் தான் அரசாங்கத்துக்குச் சவால் விட விரும்புகிறேன். கொள்ளையடித்தலில் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பான்மை

யோர், அவர்களுக்கென ஒரு அரசியல் கட்சி இருக்கும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்கள். கொள்ளையடிக்கும் போதோ, அல்லது கொள்ளைப் பொருட்களுடனே கைது செய்யப்பட்டவர்களில் எந்த ஒரு வகையிலும் எமது கட்சியுடன்—கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புள்ள ஒருவராவது இருக்கின்றனரா என காட்டுமாறு நான் அரசாங்கத்துக்குச் சவால் விடுகின்றேன். நீர்கொழும்பு சிறையிலிருந்து மட்டும் ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து வந்த கட்டளைகளின் பேரில் ஏறத்தாழ 700 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மினுவாங்கொட தேர்தல் தொகுதியிலுள்ள விசேஷ சேவை ஊழியர், தான் மினுவாங்கொட நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக எதவும் கூறவில்லை.

ஆனால் குறிப்பிட்ட அந்த நபர் அத்தொகுதியில் விசேஷ சேவை ஊழியராக இருந்தவர். இவர்களில் சிலர் இ. போ. ச. போன்ற கூட்டுத்தாபனங்களில் அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் வேலைகளுக்கும் வேறு பதவிகளுக்கும் அமர்த்தப்பட்டவர்கள். இந்த 700 யேரில், பெரும்பான்மையோர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள். உருவாகிய கஷ்டத்திலிருந்து விடுபடும் நோக்கத்துடன் நீங்கள் மூன்று கட்சிகளைத் தடை செய்கிறீர்கள்; அவற்றின் இல நலைவர்களைக் கைது செய்கிறீர்கள்; மற்றையோரைப் பிடித்துக் கொடுப்போருக்குச் சன்மானம் தருவதாக அறிவிக்கிறீர்கள். பின்னர் 'இடதுசாரிகளே இதையெல்லாம் செய்தவர்கள்' எனக் கூறுகிறீர்கள். எவரும், ஒரு பூனைக்குட்டி கூட, இந்தக்கதையை நம்பத் தயாராகவில்லை. இந்நாட்டிலுஞ் சரி, வெளிநாட்டிலுஞ் சரி, எவருமே இதை நம்பவில்லை.

பிறகு என்ன நடக்கிறது? அடுத்து அச்சம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. அமைச்சரவைக் கூட்ட முடிவில், மிகவும் துரதிஷ்டகரமான பொறுப்பு கௌரவ ராஜாங்க அமைச்சர் மீது சுமத்தப்படுகின்றது. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அவர் வந்து பொதுமக்களுக்கு அறிவிக்கின்றார். கடந்த வாரம் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை அல்லது சஞ்சிகையின் உள்நாட்டு நிருபர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவது சம்பந்தமான சட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக அவர் அறிவித்தார். உலகின் எந்த ஒரு நாடும் இப்படிச் செய்ததில்லை. ஒரு தவறை மீண்டும் மீண்டும் செய்யும் ஒரு வெளிநாட்டு நிருபரை நீங்கள் வெளியேற்றலாம் நீங்கள் அதைச் செய்துமிருக்கிறீர்கள். ஆனால், பொது ஜன தகவல் தொடர்பு சாதனங்கள் கௌரவிக்கப்படுகின்ற நாகரிகம்

நிலவுகின்ற ஒரு நாட்டில், வெளிநாட்டுப் பத்திரிகைக்காக ஒருவர் பணி புரிகின்ருர் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களைத் தண்டிக்க ஒரு சட்டத்தை நீங்கள் ஒரு போதும் கொண்டு வரமுடியாது.

**ஒரு உறுப்பினர்:**

நீங்கள் ரஷ்யா பற்றியா பேசுகிறீர்கள்?

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

உங்களுக்கு ரஷ்யாவைப் பற்றி எதுவுமேதெரியாது. அதனுல் எதுவும் பேசாமலிருப்பது நல்லது. ரஷ்யாவில் மட்டுமல்ல, நாஸி ஜெர்மனியில் கூட இவ்வாருன சட்டங்கள் இருந்ததில்லை. எனவே, இங்குதான் முதல் முறையாக இது மேற்கொள்ளப்பட விருக்கிறது. கண்டதற்கெல்லாம் மிரளாமல், சற்று முதிர்ச்சி பாவத்துடன் அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது, நீங்கள் வெளிநாட்டுப் பத்திரிகைகள் எதைச் செய்ய வேண்டுமென எதிர்ப்பார்க்கிறீர்கள்? அவை வழக்கம் போல செய்திகளைச் சேகரிக்கின்றன; அவற்றைப் பிரசுரிக்கின்றன. சில சமயங்களில், அச்செய்திகள் புறநிலைப்பட்டனவாக உள்ளன. அது கூட உங்களைப் புண்படுத்தக் கூடியதாக இருக்கலாம். அதற்கும் எதுவும் செய்வதற்கில்லை. அத்தகைய செய்திகளுக்கு ஏதுவான நிலைமைகளை அகற்ற நீங்கள் முயல வேண்டும்.

நான் பத்திரிகைகளில் இன்னுமொரு விஷயத்தைப் படித்தேன். ஜனுதிபதியும், தொழிற்துறை அமைச்சரும் சில வெளிநாட்டு பத்திரிகைகள் மீதும், பி. பி. ஸீ. மீதும் வழக்குத் தொடரவிருப்பதாக கௌரவ. அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் கூறியுள்ளார். ஐயா, இதற்கு உடனடியாக நிவாரணம் காண வேண்டும். ஒரே நேரத்தில் மானபங்கஞ் செய்யப்படும் இத்தனை அமைச்சர்கள் வேறெந்த அரசாங்கத்திலும் இருந்த தில்லை எனவே நான் கருதுகிறேன். இரு அமைச்சர்கள் ஏற்கனவே உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளனர். வேறு இரு அமைச்சர்கள் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு எதிராக வழக்குத் தொடர ஆயத்தமாகின்றனர். ஆக, நான்கு அமைச்சர்கள் வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகைகளுக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தொடருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதிலுள்ள பிரச்சினை என்னவெனில், வெளிநாட்டுப் பத்திரிகைகள் மீது வழக்குத் தொடரும் போது, அந்த வழக்குகள் அந்தந்த

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை



வெளிநாடுகளிலுள்ள நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்பட வேண்டும்- இந்த நீதிமன்றங்கள் இயங்குவதைத் திடீரென்று நிறுத்திவைப்பதில் தான் சங்கடமிருக்கிறது. அந் நீதிமன்றங்கள் தொடர்ந்து இயங்கவே செய்யும். அதனால், அங்கு நீங்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே, வெளிநாட்டுப் பத்திரிகைகள் மீது வழக்குத் தொடரும் போது நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

ஐயா, இப்போது தான் இவ்விஷயத்தின் மற்றைய அம்சங்களை அணுக விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்துக்கு நேர்ந்த கதி பற்றியதே இது. உயர்நீதிமன்றம் 1801-ல் தொடங்கப்பட்டது. 1883-ல் ஒரு சாஸனம் இயற்றப்பட்டது. 1883-ம் ஆண்டு என எடுத்துக் கொண்டாலும், கடந்த 150 ஆண்டுகளாக உயர் நீதிமன்றம் இடை நிறுத்தமின்றி இருந்தும் இயங்கியும் வந்திருக்கிறது. உங்களுடைய அரசாங்கத்தின் காலத்தில் தான், ஏறத்தாழ 172 ஆண்டுகள் முறியடிக்கப்படாத சாதனையுடன் இருந்து வந்த உயர்நீதிமன்றம் இருக்கை யழிந்து போனது (குறுக்கீடு) பிழையென எதைச் சொல்லுகிறீர்கள்? இருக்கிறது என நீங்கள் வாதித்தால், ஆம், நீதிமன்றக் கட்டடங்கள் இன்னும் இருக்கவே செய்கின்றன.

**திரு. என். டென்ஸில் பெர்னாண்டோ:**

அப்படிச் சொல்லாதீர்கள். அது தவறானது; உயர் நீதிமன்றம் ஒன்பது நீதிபதிகளின் சபை முன்னே இருக்கிறது. இல்லையென நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்?

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

நான் அதுபற்றிக் கூறவே வருகிறேன். எனது நண்பருக்கு உயர்நீதிமன்றத்துக்காக வக்காலத்து வாங்க வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு)

**திரு. டென்ஸில் பெர்னாண்டோ:**

நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். அவர் கூறும் எல்லாமே தவறானது. ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட சபையின் முன்னால் உயர்நீதிமன்றம் இருக்கவே செய்கிறது. 7-ம், 8-ம் திகதிகளில் நீதிபதிகள் இயங்கினரா? என்பதே இன்று வாதிக்க வேண்டிய விஷயமாகும். எனவே, அது பற்றி இங்கு எப்படிப் பேச முடியும். அது நீதிக்குட்பட்டது.

105836

KOHA JPL



திரு. சரத் முத்தெட்டுவேகம:

இவர்தான் அரசாங்கத்தின் சட்ட ஜாம்பாவான்.

திரு. டென்ஸில் பெர்ணண்டோ:

இன்று நீதிமன்றம் அமர்கின்றது. அவ்வாறிருக்க, அது இல்லை என எப்படிக் கூறமுடியும்? அது இன்று அமர்கின்றது.

திரு. சரத் மூத்தெட்டுவேகம:

உயர்நீதிமன்றம் இன்று அமர்கின்றது என்பது மட்டும் சரியானது.

திரு. டென்ஸில் பெர்ணண்டோ:

அது தவறுனது. நான் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன், இது நீதிக்குட்பட்டது.

திரு. சரத் முத்தெட்டுவேகம:

ஐயா, சில சமயங்களில் அவர் சரியாகவே பேசுகிறுர். ஏனெனில், அவர் உயர் நீதிமன்றம் இன்று அமர்வதாகக் கூறினுர்; அந்த மட்டில் அது சரி.

திரு. டென்ஸில் பெர்ணண்டோ

உயர் நீதிமன்றம், அது 7ம், 8ம், திகதிகளில் இயங்கியதா என்பதைத் தீர்மானிக்கவே இன்று அமர்கிறது. உயர் நீதிமன்றத்தின் முன்னுல் உள்ள பிரச்சினை அதுதான். அதையே அவர்கள் ஆராய்கிறுர்கள் உயர் நீதிபதி சட்டமா அதிபருக்கு இது பற்றி விருந்து பிறப்பித்துள்ளார். அவர் இவ் வழக்கை ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட சபையின் முன்னுல் வாதாடுகிறுர். அது நீதிக்குட்பட்டது. அதில் சந்தேகம் எதுவும் இல்லை.

திரு. சரத் முத்தெட்டுவேகம:

நீங்கள் பேசி முடித்து விட்டீர்களா? 8ம், 9ம் திகதிகளில் உயர் நீதிமன்றத்தின் அமர்வு சட்டரீதியானதா என்பதை ஆய்ந்தறியவே இன்று உயர் நீதிமன்றம் கூடுகின்றது. 10ம், 11ம், 12ம், 13ம், 14ம் திகதிகளில் உயர் நீதிமன்றம் இருக்கவில்லை என்பது சர்ச்சைக்கிடமற்ற விஷயமாகும். 8-ம், 9-ம் திகதிகளின் அமர்வே தற்போது நீதிமன்றத்தில் வாதத்துக்குட்பட்டுள்ள விஷயமாகும். 10-ம், 11-ம், 12-ம், 13-ம், 14-ம் திகதிகளில் உயர் நீதிமன்றம் இருக்கவில்லை என நான்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



கூறுகிறேன்-மீண்டும் கூறுகிறேன்- 172 அல்லது 182 ஆண்டுகால வரலாற்றில் முதல் தடவையாக இந்த நாடு உயர் நீதிமன்றம் இல்லாத நிலைக்கு முகம் கொடுக்கிறது.

இதற்கான காரணம் என்ன? இதற்கான காரணம் அவர்கள் சரியான முறையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளாததே. குறிப்பிட்ட ஒருவர் மீது நான் பழியைப் போட விரும்பவில்லை - இதற்கான முழுப் பொறுப்பாளி அரசாங்கமே. உயர் நீதிமன்ற நிதிபதிகளை மாற்ற அரசாங்கம் வேண்டுமென்றே முனைந்தது. சில நீதிபதிகளை நீக்கவும், 'நீங்கள் நாங்கள் சொல்லுவது போல ஆடாவிட்டால், உங்களைக் எப்படிக் கவனிப்பது என எங்களுக்குத் தெரியும்' என்பதை நீதிபதிகளுக்குக் குறிப்பாலுணர்த்தவும் அரசாங்கம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது. ஏனெனில், ஆரம்பத்திலேயே, அதாவது 8-ம் அல்லது 9-ம் திகதியிலேயே சில நீதிபதிகளை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்திருந்தால், அது அவ்வாறு செய்வதற்கு ஆறு நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. பத்திரிகைகளில் பலவகையான செய்திகள் பிரசுரமாக அனுமதித்திருக்க வேண்டியதில்லை,

நான், 14-ம் திகதியே அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர், செப்டம்பர் 15-ந் திகதி 'டெய்லி நியூஸ்' பத்திரிகை வெளியிட்ட தலைப்புச் செய்தி இதுதான்:

'நீதிபதிகள் நியமனம்'

'அமைச்சரவை ஜனாதிபதியிடம் ஒப்புவித்தது'

'உயர் நீதிமன்றத்துக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குமான நீதிபதிகளை நியமிக்கும் முழுப்பொறுப்பினையும் ஜனாதிபதியிடம் விட்டு விடுவது என நேற்று அமைச்சரவை தீர்மானித்தது.........'

'அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்ததிஸ்ஸ. டெ. அல்விஸ் நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும் போது, நீதிபதிகள் தமது சத்தியப் பிரமாணங்களை எடுக்கத் தவறியமையைத் தொடர்ந்து உருவாகிய நிலைமை பற்றிப் பல அமைச்சர்களின் கருத்துக்களைச் அமைச்சரவை ஆராய்ந்தது.

'முன்னர், ஜனாதிபதி ஜயவர்த்தன தமது கருத்துக்களை தெரிவிக்குமாறு அமைச்சர்களைக் கோரியிருந்தார்.

'விரிவான கருத்துப் பரிமாறுதலின் பின்னர், இவ்விஷயத்தை ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு விடுவதென அமைச்சரவை தீர்மானித்தது'.

'எப்போது ஒரு தீர்மானத்தை எதிர்பார்க்கலாம் எனக் கேட்கப்பட்ட போது, அது ஜனாதிபதியைப் பொறுத்த விஷயம் என கலாநிதி டீ. அல்விஸ் கூறினார்'.

'இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் எம்மால் அதை அறியமுடியும்'

அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், அமைச்சரவைப் பேச்சாளரின் மனதில் எதுவும் நடக்கக்கூடும் என்ற வெறுமனே சந்தேகம் மட்டுமன்றி, ஒரு தெளிவான சாத்தியப்பாடும் இருந்திருக்கிறது. இது'டெயிலி நியூஸ்' கூறியது. செப்டம்பர் 15-ம் திகதியை 'சன்' பத்திரிகை இது பற்றி மேலும் தெளிவாகக் கூறியிருந்தது. அதனது தலைப்புச் செய்தி கூறுவதாவது;

'ஒன்றிரண்டு நாட்களில் புதிய நியமனங்கள்'

'உயர் நீதிமன்றங்களில் ஆறு புதுமுகங்கள்'

'உயர் நீதிமன்றத்துக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குமான நியமனங்களை, அங்கு பதவி வகிக்கும் சிலருக்கு மாற்றீடாக அரசாங்கம் செய்யவுள்ளது.'

இதுதான் செய்தியின் சாரம். இச்செய்தி சரியானதா இல்லையா? என்பது பற்றி நான் பேசவரவில்லை. பத்திரிகைக் காரர்கள் ஹேஷ்யங்களின் அடிப்படையில் செய்திகளை வெளியிடலாம்: ஆனால், அவை திருத்தப்படவில்லை. உயர்நீதிமன்றம் தொடர்பான ஒரு நிலை ஒரு வாரக் காலமாக உருவாகுவதற்கு அனுமதித்ததன் மூலமும், உயர்நிதிமன்றம் இல்லாத அந்த ஏழு நாட்களை நகர விட்டதன் மூலம் அரசாங்கம் நாட்டில் உயர்நீதிமன்றத்தைக் கேலிக்கிடமாக்கும் இவ்வகையான கதைகள் உருவாக இடமளித்துள்ளது. இதுதான் உண்மை நிலையாகும். இதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என நான் கூறுகிறேன். இப்போதுள்ள நிலைமை என்ன?

இந்த நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் அரசியல் வழக்கில் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கானோர் உள்ளனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களும், ஆட்கொணர்வு மனு முறையீடுகளுடன் இந்

நீதிமன்றங்களுக்குச் சென்றவர்களுமாகப் பலர் உள்ளனர். இந்நிலையில், நீங்கள் அரசியலமைப்புக்கு ஒரு எட்டாவது திருத்தம் கொண்டுவரப் படுமென்றும், இந்த எட்டாவது திருத்தத்துக்கு அமைய உயர்நீதிமன்ற மும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் ஒருங்கிணைக்கப்படவுள்ளது. என்ற ரீதியிலும் ஒரு செய்தியை பத்திரிகைகளின் கைகளுக்கு நழுவவிட்டு விட்டு, அச்செய்திக்கு மறுப்புத் தெரிவிக்காதிருந்தது மட்டுமன்றி இந்த ஒருங்கிணைப்பின் பின்னர் எவருக்கும் எதுவும் நேரக்கூடும் என்ற பிரமையை நீதிபதிகளுக்கும் இந்த நாட்டுக்கும் நீங்கள் ஏற்படுத்தியுள்ளீர்கள். இந்நாட்டின் உயர்நீதிமன்றங்கள் செயல்படுவதற்கு ஏற்ற சூழல் இதுவல்ல. சாமராஜ் இப்படித்தான் செய்தார்; ஒருங்கிணைப் பின் வாயிலாக இல்லாதொழிப்பு. உயர்நீதிமன்றத்தின் ஒரு பகுதியை ஒருங்கிணைத்ததன் மூலம் அவர் அதனைச் சாகடித்தார். அதைத்தானா நீங்களும் செய்யப் போகிறீர்கள்? இதுபற்றி அரசாங்கம் எங்களுக்கு விளக்குமா? அரசியல் அமைப்புக்கு எட்டாவது திருத்தமொன்று செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்பது உண்மையா? அது உண்மையாயின், அது இரு நீதிமன்றங்களும் ஒருங்கிணைக்கப்பட வகை செய்யுமா?

கடந்த சில மாதங்களில் நடைபெற்றவை தொடர்பாக எழும் பல கேள்விகளுக்கு விடையளிக்க கௌரவ. நீதியமைச்சர் கடமைப்பட்டவர் என நான் அவருக்குக் கூற விரும்புகிறேன். முதலாவதாக, சிறையில் நடைபெற்ற சம்பவம். வேறொரு நாட்டிலென்றால், சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் இந் நேரத்தில் ராஜினாமாச் செய்திருப்பார் சிறைகளிலிருந்த 52 அல்லது 53 கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இப்போது, உயர் நீதிமன்ற விவகாரம் எழுந்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும் டி. ஸ். சேனநாயக்கா அரசு டட்லி சேனநாயக்கா அரசு பண்டாரநாயக்கா அரசு கொத்தலாவல அரசு ஆகியவற்றின் கீழும் 182 ஆண்டுகள் எதுவித தடங்கலுமின்றி இருந்து வந்த உயர்நீதி மன்றம், ஜயவர்த்தன அரசாங்கம் வந்ததும் ஏழுநாட்களுக்கு இருக்கையழிந்து போய்விட்டது. இன்று இங்கு வராமலுள்ள கௌரவ நீதியமைச்சர் அவர்கள்.

### திரு. ஷெல்டன் றணராஜா - துணை நீதியமைச்சர்

தற்சமயம் கௌரவ நீதியமைச்சர் வெளிநாடு போயுள்ளார். அவர் நாட்டில் இல்லை.

### திரு. சரத் முத்தெட்டுவேகம

அவர் 'லோரஸியா' மகா நாட்டில் இருக்கிறார். இது கௌரவ வெளிநாட்டமைச்சர் இனவாதம் பற்றிய மகாநாட்டில் கலந்து

கொள்ள ஜெனீவா சென்றதைப் போலத்தான் இருக்கிறது. அவர் 'லோஏஸியா' சட்ட மகாநாட்டுக்குப் போய்விட்டார். ஆனால் இங்கு, சட்டம் என்பது இல்லை. ஆசியாவில் சட்டம் இருக்கலாம் - ஆனால் இலங்கையில் சட்டம் இல்லை; ஏனெனில், இங்கு உயர் நீதிமன்றமோ மேன்முறையீட்டு நீதிமன்றமோ இல்லை...(குறுக்கீடு) இது மிகப்பெரிய கேலிக் கூத்து. துணை நீதியமைச்சருக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அது பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லது.

ஒரு உறுப்பினர்

*நீங்கள் ஏன் ரஷ்யா பற்றிப் பேச மாட்டேன் என்கிறீர்கள்?*

திரு. சரத் முத்தெட்டுவேகம

நான் குறிப்பிட்டதைப் போல, உயர்நீதி மன்றம் பூரணமாக அகற்றப்பட்டு, அது இருக்கையொழிந்த ஒரு நிலைமை இன்று உருவாகியுள்ளது. இந் நிலையில், அரசாங்கம் இங்கு வந்து நாங்கள் 'இவர்களை நியமித்துள்ளோம்' எனக் கூறுகிறது. எட்டாவது திருத்த கொண்டுவர அது உத்தேசித்துள்ளதா என நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். கௌரவ துணை நீதியமைச்சர் எட்டாவது திருத்தம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி எமக்குக் கூறுவாரா?

திரு. ஷேல்டன் றணராஜா

எனக்கு இது பற்றித் தெரியாது என்று மட்டுமே என்னால் கூற முடியும்.

திரு. சரத் முத்தெட்டுவேகம:

மற்றைய கௌரவ அமைச்சர்களுக்கும் இது பற்றித் தெரியாது என்றே நம்புகிறேன்.

நேற்றைய 'டெய்லி நியூஸ்' தற்சமயம் நடைபெறும் வழக்கு விசாரணைகள் பற்றிய செய்தியொன்றினை வெளியிட்டிருந்தது இந்த வழக்கு விசாரணைகளின் போது, உதவி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. ஷிப்லி அஸீஸ் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் அறைகள் பூட்டப்பட்டுள்ளது பற்றியும், அவற்றின் முன் பொலீசார் காவலுக்கு நிற்

KOHA
JPL

பது பற்றியும் குறிப்பிட்டார். இது போன்ற ஒரு சம்பவம், 19ம் நூற்றாண்டில் வாஷிங்டன் என்ற பிரதம நீதியரசர் இருந்த வேளையிலேயே நடைபெற்றது. இரு பிரிட்டிஷ் இராணுவ வீரர்களுக்கு ஒரு மாஜிஸ்திரேட் கடுந் தண்டனை விதித்திருந்தார் இது பற்றி இராணுவத்தினர் ஆத்திரமடைந்திருந்தனர். அப்போது கோட்டையில் இராணுவப் பொறுப்பதிகாரியாக விருந்த காப்டன் பெய்லி அந்த மாஜிஸ்திரேட்டுக்குக் காரசாரமான ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். மாஜிஸ்திரேட் இருக்குமிடத்துக்குச் செல்லும் வீதிகள் உயர் நீதி மன்றத்தினது உத்தரவின் பேரில் மூடப்பட்டன; பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்குக் கதவடைக்கப் பட்ட இறுதித்தடவை அது தான். இங்கு உயர் நீதிமன்றமே அடைக்கப்பட்டு விட்டது.

இது பற்றி விளக்குகையில், திரு. ஷிப்லி அஸீஸ், இது ஒரு வேற்று வேட்டுத்தனமான ஆவலாதி அதிகாரியால் மேற்கொள்ளப் பட்ட வேலை எனக் குறிப்பிட்டார். அதாவது, நீதிபதிகளின் அறைகள் ஒரு வெற்று பேட்டுத் தனமான ஆவலாதி அதிகாரியாலேயே பூட்டப் பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. இறுதியில் இந்த அதிகாரி மேல்தான் பழி வந்து சேரும். ஆனால் இதில் அவருக்கு உள்ள ஆவல் என்ன? உயர் நீதிமன்றத்தைப் பற்றி அவருக்கு ஆவல் பிறக்காது ஏனெனில், அதையல்லவா அவர் பூட்டி வைத்திருக்கிறார். நீதியைப் பற்றி அவர் ஆவல் கொள்ள மாட்டார்கள் ஏனெனில், அதைத்தான் அவர் வழி மறித்துள்ளார். உயர் நீதிமன்றத்தினால் நீதி பரிபாலிக்கப் படுகின்றதைத் தடுக்கின்ற விஷயத்தின் மீது தான் அவருக்கு ஆவல் ஏற்பட்டிருக்க வேண்டும். நான் துணை நீதியமைச்சரைக் கேட்கிறேன். நீதிபதிகளின் அறைகளுக்குச் சீல் வைத்த இந்த அதிகாரி தொடர்பாக என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்?

தானே நீதிபதிகளினது வாசஸ்தலங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டஞ் செய்ததாக கனுலக்கி கூறுகிறார். ஆனால் இந்த அதிகாரியோ நீதிபதிகள் உயர் நீதிமன்றத்தினுள் பிரவெசிக்கும் கதவுகளை மூடியுள்ளார். தமது மேல் அங்கிகளைக் கூட வெளியே எடுக்க முடியாதுள்ளனர்; அவர்களது அந்தரங்கச் செயலாளர்கள் தமது தஸ்தாவேஜுக்களை வெளியே எடுக்க முடியாது விழிக்கின்றனர். இந்த தான்தோன்றித்தனமான அதிகாரியின் செயல் குறித்து நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? எதுவுமேயில்லை!

**திரு. ஷெல்டன் றணராஜா:**

நீதிபதிகளின் அறைகளை மூடுமாறு கௌரவ: நீதியமைச்சர் எவருக்கும் கூறவில்லை என்பதை மட்டும் என்னுல் கூற முடியும்.

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

அப்படியானல், யார் அவ்வாறு கட்டளையிட்டது என்பதைத் தேடியறியும் உங்கள் கடமையைச் செய்தீர்களா? இது உங்கள் அலுவலகத்துக்கு அடுத்த வளவில் நடந்திருக்கிறது. அந்தத் தான்தோன்றித்தனமான அதிகாரிக்கு உத்தரவு பிறபித்தவர் யார்? எவரும் உத்தரவு பிறப்பித்திருக்காவிட்டால், அந்த அதிகாரியைப் பிடித்து வெளியே தள்ளுங்கள். இதைப் போன்ற தான்தோன்றித்தனமான பல அதிகாரிகள் இருக்கின்றனர். சிங்களத்தில் அவர்களைப் 'பந்தங்காறயோ' எனச் சொல்லுவார்கள். இந்தப் 'பந்தங்காவி'க்கு நீதிபதிகளின் அறைகளைப் பூட்டுமாறு உத்தரவிட்டது யார்?

**திரு. ஷெல்டன் ரணராஜா:**

கௌரவ. நீதியமைச்சர் இங்கு இருக்கும் போது, நீதிமன்றத்தையும் நீதிபதிகளின் அறைகளையும் பாதுகாக்குமாறு பணித்திருந்தார் என்பதை மட்டும் தான் அறிவேன்.

**திரு. சரத் முத்தெட்டுவேகம:**

அவர் நீதிபதிகளின் கூடத்தை பிரதம நீதியரசரிடமிருந்து பாதுகாத்திருக்கிறுர்! அவர் பாதுகாத்த லட்சணம் இதுதான். அடுத்த சில நாட்களில் என்ன நிகழப் போகிறது என்பது அவருக்கும் தெரியும்; அந்தத் தான்தோன்றீத்தனமான அதிகாரிக்கும் தெரியும். இதுதான் உண்மை.

இந்த அவசரகால நிலைப் பிரகடனம் யாருடைய நன்மைக்காக? ஒரு இம்மியளவு சாட்சியமின்றி மக்களைச் சிறையில் அடைத்து வைக்கவும், கட்சிகள் மீதான தடையை நீடிக்கவும், பத்திரிகைகளைத் தடை செய்யவும், சிறையில் கைதிகளைக்கான மக்கள் செல்வதைத் தடுப்பதற்கும் அரசாங்கத்துக்கு வசதி அளிக்கின்ற அவசரகால நிலைப் பிரகடனம் இது. இந்நிலையில், என்னைப் பொறுத்தவரையில், இந்த அவசரகால நிலை நீடிப்பை என்னுல் ஆதரிக்க முடியாது என்றே தான் கூறுவேன்.

## அக்டோபர் 20, 1983

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

திரு. சரத் முத்தெட்டுவேகம:

அவசரகால நிலையை நீடிப்பது பற்றிய விவாதம் கடந்த சில மாதங்களில் ஒரு மாதாந்த நிகழ்ச்சியாக மாறிவிட்டது. எனது நோக்கின்படி, இது இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்கும். அவசரகால நிலை பற்றியும், அது பிரகடனப்படுத்துவதற்கு இட்டுச் சென்ற காரணிகள் பற்றியும் பல விஷயங்கள் இச்சபையில் எம்மில் பலரால் விவாதிக்கப்பட்டுள்ளன.

முதலில், நேற்று ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட சர்வ கட்சி மகாநாட்டினைப் பொறுத்தளவிலான எமது கட்சியின் கருத்து நிலையை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

நேற்றைய சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு எம்மைக் கோரும் 14–ந் திகதியிடப்பட்ட கடிதம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளரின் கைகளுக்கு 15–ந் திகதி காலையே வந்து சேர்ந்தது. இக்கடிதம் திரு. கே. பி. சில்வா, பொதுச் செயலாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என முகவரியிடப்பட்டிருந்தது. இக்கடிதம் கட்சிக் காரியாலய வாசலில் அவரிடம் ஒரு பொலீஸ் ஊழியரால் கையளிக்கப்பட்ட தருணத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட நிலையிலேயே இருந்தது. திரு. கே. பி. சில்வா அக்டோபர் 15-ந் திகதி எழுதிய பதில் கடிதத்தை பதிவுக்காக இங்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன். ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட இக்கடிதம் வருமாறு :—

'மாண்பு மிக்கவருக்கு,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் என விழித்து நீங்கள் எனக்கு எழுதிய 1983, அக்டோபர் 14-ந்திகதியிடப்பட்ட கடிதம் இன்று எனக்குக் கிடைத்தது. இதற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

மாண்புமீக்க ஜனாதிபதி அறிந்த பிரகாரம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் அரசாங்கத்தினால் 1983 ஜூலை 30–ந் திகதி தடை செய்யப்பட்டது. அன்று முதல் இன்றும் இத்தடை நீடிக்கிறது.

இத்தடை நீடிப்பதனுல், தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் பற்றிப் பரிசீலிக்கும் பொருட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினைக் கூட்டுவது சட்ட ரீதியில் எனக்குச் சாத்தியமில்லை என்பதை ஜனதிபதி புரிந்து கொள்வீர்கள்.

இலங்கைத் தமிழர் தொடர்பானதும், இனங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பானதுமான பிரச்சினைகள் அரசியல் ரீதியான கலந்துரையாடல் வாயிலாகவும், பேச்சுவார்த்தைகள் வாயிலாக வுமையன்றி அடக்குமுறை அல்லது இராணுவ அல்லது பயங்கரவாத மார்க்கங்களில் தீர்க்கப்படலாகாது என்ற நிலைபாட்டினை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே பேணி வந்துள்ளது. இதனுல் தான், நாம் 1983 மே 30-ல் மாண்புமிக்க ஜனதிபதிக்கு-'

சர்வகட்சி மகாநாடு பற்றி மற்றவரெவரும் பேசுவதற்கு முன்பதாகவே 1983 மே 30-ந் திகதி இப்பிரச்சினை குறித்து ஆராய ஒரு சர்வகட்சி மகாநாட்டினைக் கூட்டுமாறு நாம் ஜனதிபதிக்கு எழுதியிருந்தோம்.

'இதனுல்தான், நாம் 1983 மே 30-ல் இத்தேவையின் பொருட்டு ஒரு சர்வகட்சி மகாநாட்டினை நீங்கள் கூட்டவேண்டுமெனக் கோரி உங்களுக்கு எழுதியிருந்தோம்.

அதன் பின்னர் நிலைமை கணிசமான அளவு மோசமடைந்துள்ளது. தங்கள் கடிதம் குறிப்பிடுவது போல எமது மத்திய கமிட்டியினுல் பரிசீலித்து மதிப்பீடு செய்யவேண்டிய புதிய நிலைமைகள் உருவாகியுள்ளன.

எமது இந்த நிலைமையை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நாம் திடமாக நம்புகிறேம். சாத்தியமான வேளையில், எமது மத்திய கமிட்டியின் கருத்துக்களை நான் உங்களுக்குத் தெரிவிப்பேன்'.

கட்சி மீதான தடை 18-ந் திகதி நீக்கப்பட்டது. 19-ந் திகதி நாம் மீண்டும் ஜனதிபதிக்கு எழுதினேம். இத்தடவை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரே எழுதினர். அது ஒரு நீண்ட கடிதம். அது முழுவதையும் இங்கு வாசித்து பதிவு ஏட்டினை நிரப்ப நான் விரும்பவில்லை. ஒரு வெற்றிகரமான அல்லது அர்த்தபுஷ்டியுள்ள மகாநாட்டுக்கு அவசியமான முன்தேவைகளை நாம் இக்கடிதத்தில் விளக்கி

யிருந்தோம். தடைசெய்யப்பட்டுள்ள இதர இருகட்சிகளான மக்கள் விடுதலை முன்னணி, நவ லங்கா சமசமாஜிக் கட்சி ஆகியவற்றின் மீதான தடையை நீக்குவது, ஜுலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற ரீதியில் வழக்குத் தொடர சாட்சியங்கள் எதுவுமின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வது ஆகியன உட்பட நாட்டில் ஜனநாயகத்தை சமுகப்படுத்துவது இம் முன் தேவைகளில் ஒன்று எனவும், தமிழ் மக்களைப் பெரிதும் அடித்தளமாகக் கொண்ட கட்சிகள் மகாநாட்டுக்கு அழைக்கப்படும் பட்சத்திலேயே ஒரு காரியார்த்தமான மகாநாட்டினை நடாத்துவது சாத்தியம் என்றும் நாம் கருதினோம்.

எமது இந்த நிலைபாட்டையே அக்டோபர் 19-ந் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருந்தோம்.

இதே வேளையில், மகாநட்டுக்குச் சென்று, அங்குள்ளோர் முன் எமது கருத்துக்களை முன்வைக்கும் பிரச்சினை பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருந்த தருணத்தில், மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த முக்கிய கட்சிகள் கூட பல்வேறு காரணங்களுக்காக நேற்றைய மகாநாட்டில் கலந்து கொள்ளுவதில்லை எனத் தீர்மானித்திருப்பதை அறிந்தோம். நாம் இன்னும் தயாராக உள்ளோம். ஒரு காரியார்த்தமான கருத்துப்பரிமாறுதல் நடைபெற்றால், அதில் கலந்து கொண்டு தற்போது மிக முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள இப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு தீர்வு மார்க்கத்தைக் கண்டு, அதை என்றென்றைக்குமாய்த் தீர்த்து வைக்க எம்மாலான பங்குப் பணியை ஆற்ற நாம் தயாராக உள்ளோம். மகாநாடு பற்றி நான் கூறக் கூடியது அவ்வளவே.

இனி வரும் விஷயம் விவாதிக்கப்படவேண்டிய ஒன்றே. இன்று அரசாங்கம் என்ன செய்கிறது என்பது பற்றியதே இது. கடந்த தடவை அவசரகால நிலை பற்றி இங்கு ஆராயப்பட்ட போது, திரு. பார்த்தசாரதியின் விஜயத்தை அரசாங்கம் ரத்துச் செய்தது தவறு என்றும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குச் சாத்தியமான அனைத்து மார்க்கங்களையும் அரசாங்கம் கண்டறிய வேண்டுமென்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். இப்போது என்ன நடந்துள்ளது. போன தடவை அவசர கால நிலைபற்றி விவாதித்து தற்போது ஒரு மாதகாலம் கடந்து விட்டிருக்கிறது. நிலைமையை தீர்வுக்கும் அண்மிக்கச் செய்யும் பொருட்டு ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையையாவது தான் மேற்கொண்ட

105836

தாக அரசாங்கத்தினல் நேர்மையுடன் கூற முடியுமா? எனக்குத் தெரிந்த வரையில், எதுவுமே செய்யப்படவில்லை. மறுபுறத்தில், நேர்விரோதமான சம்பவங்களே நடைபெற்றுள்ளன.

1983 ஜூலையில் ஏற்பட்ட அச்சத்தினல் அரசாங்கம் எல்லா விதமான அறிக்கைகளையும் விடுக்க ஆரம்பித்தது என இந்த அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டுகிறேன். இவற்றுள் ஒன்று கௌரவ ராஜாங்க அமைச்சரின் ஒரு அறிக்கையாகும். இந்த அறிக்கை அவராலோ அல்லது ஜனதிபதியாலோ விடுக்கப்பட்டது என்பது பற்றி எனக்குச் சரியாகத் தெரியவில்லை. அரசாங்கம் ஒரு சதியைக் கண்டுபிடித்துள்ளது என அந்த அறிக்கை கூறியது. இச்சதித்திட்டத் திட்டத்தின் முதல் கட்டம் தமிழரையும் தாக்குவதென்றும், இரண்டாவது கட்டத்தில் முஸ்லீம்களையும் மூன்ருவது கட்டத்தில் கிறிஸ்தவர்களையும் தாக்குவதென்றும் கூறப்பட்டது.

நாங்கள் இந்நாட்டில் வாழ்கிறேம்; இங்குதான் அரசியலும் நடாத்துகிறேம். ஒரு இரகஸியத்தை வைத்துக் காப்பாற்ற முடியாத நாடொன்று இது. அப்படியொரு சதித்திட்டம் இருந்திருந்தால், எங்களுச்கு அதுபற்றி சாடைமாடையாகவேனும் தெரிந்திருக்கும். இவை யாவும் இடதுசாரிகளாலும் வெளிநாடுகளாலும் திட்டமிடபட்டவை என அரசாங்கம். கூறுகின்றது. ஆனல், இந்த அறிக்கையின் விளைவாக நடந்தது என்ன? இன்று என்ன நடக்கிறது? இன்று, விரைவில் மூஸ்லீம்கள் தாக்கப்படப் போவதாக எச்சரிக்கும் கடிதங்கள் கொழும்பிலுள்ள முஸ்லீம்களின் வீடுகளில் கையளிக்கப்படுகின்றன. இப்போது என்ன நடக்கிறது என்பதை அரசாங்கத்திடமும் இங்குள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் கேட்கிறேன். நடக்கக் கூடிய விஷயங்கள் பற்றியும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராயும் கூட்டங்கள் பள்ளிவாசல்களில் முஸ்லீம்களால் நடாத்தப்படுகின்றன. இது ஒரு அபாயகரமான நிலைமை. 1983 ஜூலையில் மிகப்பெரிய சிறுபான்மை இவ்வாறு தாக்கப்பட்ட போது நாம் பெரும் பயங்கரத்தை அனுபவித்தோம். வடக்கும், கிழக்கும் தனிப்பிரதேசங்களாகும் நிலை உண்மையிலேயே உருவாகியுள்ளது. இதை அவசரகால நிலை பற்றிய விவாதத்தின் போது நான் மீண்டும் மீண்டும் கூறினேன். அது மட்டுமல்ல. இப்போது, சிறுபான்மையினரில் இன்னெரு பிரிவினர் பீதியுடன் வாழும் நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலைமையை சிலர் சந்தர்ப்பவாத காரணங்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

இது பற்றி நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். அடுத்து, கிறிஸ்தவர்களுக்கும் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்படும் பட்சத்தில் என்ன நடக்கப் போகிறது? யார் இதைச் செய்கிறுர்கள் என்பதல்ல பிரச்சினை. வடக்கிலுள்ள சில குழுக்களே முஸ்லீம்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்புவதாக அரசாங்கத்தின் சார்பில் செல்ல யாரோ எத்தனிப்பதை நான் கண்டேன். யார் அதைச் செய்தாலென்ன- அது செய்யப்படுகின்றது என்பது உண்மை. இதற்கான பீதியில் ஒருவித குழப்பத்தை உண்டாக்கும் நோக்குடன் நீங்கள் விடுத்த அறிக்கையே இவ்விதமான ஒரு கருத்தை விதைத்தது. (குறுக்கீடு) நீங்கள் சிரிக்கலாம். எவரும் சிரிக்கலாம். ஆனுல் உண்மை என்னவெனில், இரண்டாவது கட்டத்தில் முஸ்லீம்களும், மூன்றுவது கட்டத்தில் கிறிஸ்தவர்களும் தாக்கப்படவிருந்தார்கள் என அரசாங்கத்தின் சார்பில் நீங்கள் வானெலியில் விடுத்த அறிக்கையின் காரணமாகவே தாக்குதல் பற்றிய இக்கருத்து உதயமாகியது என்பதுதான். ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் எப்படுகின்ற உங்களுடைய இந்த அரசாங்கத்தின் கீழ் என்ன நடந்திருக்கிறது? அனைத்து இனங்களும் இணையக்கூடிய ஒரே கட்சி உங்களுடைய கட்சியே என நீங்கள் பல தடவைகளில் மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறீர்கள். ஐக்கிய தேசியக் கட்சி அமைத்த தர்மிஷ்ட அரசாங்கத்தின் கீழ் ஒரு சிறுபான்மை இனம் கூட இன்று பாதுகாப்பாக இல்லை! இன்றைய நிலை இதுதான். இந்நிலைப்பற்றி நீங்கள் பெருமைப்பட முடியுமா? சில வெளிநாட்டு நிருபர்களையோ, ஸ்தானிகர்களையோ பழி சொல்லுவதில் பயனில்லை. இந்த ஸ்தானிகர்களையும் நியமித்தது நீங்களே; இந்த ஸ்தானிகராலயங்களிலுள்ள சில மற்றைய அதிகாரிகளைப் பற்றி - அவர்கள் யார், எவ்வாறு நியமனம் பெற்றுர்கள் என்பது பற்றி – நான் பேச விரும்பவில்லை. நீங்களே இவர்களை நியமித்துவிட்டு, இப்போது 'அவர்கள் தமது கடமையைச் சரியாகச் செய்யவில்லை; வெளிநாடுகளில் எமது கௌரவம் நாசமாக்கப்பட்டு விட்டது. வெளிநாட்டு நிருபர்கள் தமது கடமைக்கும் மேலாகச் செய்திருக்கிறுர்கள்! எமது மதிப்பு முழுவதுமே பரிசுகெடுத்தப்பட்டு விட்டது. என அங்கலாய்க்கின்றீர்கள். இப்போது என்ன நடக்கப் போகிறது என நான் கேட்கிறேன். முஸ்லீம்கள் பயமுறுத்தப்பட்டால், நீங்கள் குறிப்பிட்ட சதியின் இரண்டாவது கட்டமாக அவர்களுக்கு தொடர்ந்து பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டால் அதன் அர்த்தம் எந்த ஒரு சிறுபான்மையினரும் பாதுகாப்பாக இருக்க முடியாத அளவுக்கு நிலைமை

மேலுமாகிக் கொண்டு வருகின்றது என்பதுதான்: எனது கருத்துப்படி ஒரு மிக அபாயகரமான சூழ்நிலைமை உருவாகி வருகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில், சர்வோதயக் இயக்கத் தலைவர் திரு. ஆரியரத்திஞவினுல் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இது பற்றிப் பத்திரிகைகளில் வந்த செய்திகள் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ என நானறியேன். அவர் இம்மாகநாட்டில், இப்பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமான ஒரு தீர்வாக, நாட்டின் ஜனுதிபதி பிரதமர் ஆகியோரின் அதிகார மட்டம் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டுமெனக் கோரியுள்ளார். இப்பேச்சு புனிதப் பாங்குள்ளதாகவும், மிக நேர்மையானதாகவும் படலாம். ஆனுல், இப்பேச்சின் அடியில் தொனிக்கும் அர்த்தம் என்ன? கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு அரசாங்கம், அதாவது ஒரே ஒரு கட்சியின் அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென்பதே அவரது கோரிக்கையின் அடிப்படைப் பொருளாகும். சிறுபான்மையினர் அபாயத்துக்குட்படுத்தப்படும் நிலைமையொன்றினை நீங்கள் உருவாக்கினுல், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமையை நீங்கள் உருவாக்கினுல், இச்சூழலில் ஆரியரத்ன குறிப்பிட்ட கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு ஜனுதிபதியையும் ஒரு பிரதமரையும் அரசகட்டில் ஏற்றிவைப்பது மிக இலகுவானதாக இருக்கும். அப்போது இந்நாட்டில் சர்வாதிகாரம் நிலவுகின்ற ஒரு நிலை உருவாகும்.

நடந்தவற்றை நோக்கும்போது, குறிப்பாக ஆசியப் பிராந்தியத்தில் இது ஒன்றும் வழமைக்கு மாறுன விஷயமல்ல. படைகளின் உதவியுடன் சிவில் அரசியல்வாதிகளோ அல்லது இராணுவமோ நடாத்துகின்ற சர்வாதிகார ஆட்சிகள் இருக்கவே செய்கின்றன. அதுவும் இவ்வாட்சி பீடங்களில் வலதுசாரிகளின் கரம் ஓங்கியிருந்தால் உழைக்கும் மக்களினதும், அறிவுத்துறையினரதும் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. அதையொத்த ஒரு ஆட்சியையா இலங்கையில் நீங்கள் கொண்டுவரப் போகிறீர்கள்? அனைத்து நிகழ்ச்சிகளினதுப் பிணைப்புத் தொடர்பினைப் பார்க்கும்போது, நாங்கள் அப்படியான ஒரு நிலைக்கே வந்து கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கும் படும். இங்கு சில கௌரவ உறுப்பினர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பற்றிப் பேசினுர்கள். சட்டமும் ஒழுங்கும் இத்துணை மோசமான நிலைக்கு வருவதற்கான ஜவாப்தாரிகள் யார்? அவர்கள் யார்? அது எந்தக் கட்சி? 1980 ஜூலை வேலை நிறுத்தத்தின்போது சோமபால கொலை செய்யப்பட்டதற்கான பழியை எந்

KOHA
JPL



தக் கட்சியின் மீது போட முடியும்? பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் பேராசிரியர் சரத் சந்திரா உரையாற்றிக் கொண்டிருக்கும்போது கூட்டத்தைத் தாக்குவதற்கெனக் குண்டர்கள் இ. போ. ச, பஸ்களில் கொண்டுவரப்பட்டனர். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் வாசஸ்தலங்களுக்கு வெளியே ஆர்ப்பாட்டஞ் செய்ய ஆட்களைக் கொண்டு வரவும் இ. போ. ச. பஸ்களே பயன்படுத்தப்பட்டன. இதற்குக் காரணமான எவரும் தண்டிக்கப்படவில்லை. எவரும் கைது செய்யப்படவில்லை: அவர் மீதும் குற்றஞ்சாட்டப்படவில்லை. எதுவே நடக்கவில்லை.

இவ்வாறான ஒரு சூழல் உருவாகி வருவது கண்டு வாளாவிருக்கும்போது என்ன நடைபெறும்? இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்குத் தமக்கு எதுவும் செய்ய அதிகாரம் உண்டு என்ற ஒரு உணர்வே ஏற்படும். ஜூலை 25-ந் திகதியன்று வெள்ளவத்தையிலுள்ள வீடுகளை எரித்து முடித்தவர்கள், தாங்கள் அதை 24 மணித்தியாலத்திலேயே செய்து விட்டதாகப் பகிரங்கமாகவே பெருமை பீற்றிக்கொண்டதை யாவரும் அறிவார்கள். ஜூலை 25-ந் திகதி அந்நேரத்தில் அரசாங்க எந்திரமோ, ஆயுதப்படைகளோ பயன்படுத்தப்படாமலிருந்தமை, நாம் செய்வது சரியானதே என்ற அவர்களின் மனப்போக்கினுக்கு உரமளித்தது. இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கொழும்பு வீதிகளில் ஒரு கவச மோட்டாரைக் கூடக் காண முடியவில்லை; அவை கராஜ்களில் அடைந்து கிடந்தன. எனவே, ஜூலை 25-ல் தமிழர்களுக்குச் செய்யவேண்டியதைச் செய்யும் அதிகாரம் தமக்கு உண்டு என்ற கருத்தே மக்களுக்கு ஏற்பட்டது. நடந்தது இது தான். இப்படி ஒரு நிகழ்ச்சி இன்னொரு நிகழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. 'எங்களால் எதையும் செய்ய முடியும்' என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டது.

ஜூலை 25-ந் திகதி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக இது வரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என நான் கேட்க விரும்புகிறேன். தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட கட்சி உறுப்பினர்கள் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை, கொள்ளைப் பொருட்களுடன் கண்டுபிடிக்கப்பட்டோரைப் பற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன். கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டவர்கள், பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான புள்ளி விவரங்களை யாராவது ஒரு அமைச்சர் எமக்குத்தர வேண்டுமென நான் கோருகிறேன். இது பற்றிக் கடந்த

தடவை நான் பேசும் போதும் குறிப்பிட்டேன். சிலர் இவ்விஷயத்தில் தலையிடு செய்து, கொள்ளையர்களை விடுவித்துக் கொண்டதன் மூலம் தம்மை பாதுகாக்கவும் ஆட்கள்இருக்கின்றனர் என்ற உணர்வு தீய சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டில் இத்தகைய ஒரு நிலைமை இருக்கும் போது, முஸ்லீம்கள் அச்சுறுத்தப்படும் போது, அவர்களின் வீடுகளுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் விநியோகிக்கப்படும் போது, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சுமுகமான தருணம் இது என நீங்கள் எப்படி எதிர்பார்க்கமுடியும்?

அடுத்து, இந்தப் பேச்சுவார்த்தைகள் எனப்படும் விஷயம் தொடர்பான அரசாங்கத்தின் நிலையை உண்மையில் என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதிலுள்ள முக்கிய விஷயமென்னவெனில், இப்பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது யார் என்பதேயாகும். தமிழ் அரசியல் குழுக்களில் பெரும் பிரிவினர் எதுவும் சாத்தியமாகாத நிலையில் ஒரு இறுதிக் கோரிக்கையாகவே பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்றே நான் கருதுகிறேன். இது என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயம் மட்டுமே. ஆனால், காரியார்த்தமான பேச்சுவார்த்தைகள் சாத்தியமாயிருந்திருக்குமாயின், இக்கோரிக்கையிலும். குறைவான தீர்வுடன் இவர்களிற் சிலரைத் திருப்திப்படுத்தியிருக்க முடியும் என்பதே எனது கருத்தாகும். ஜூலைக்குப் பின்னர் மட்டுமல்ல, காலம் முழுவதும் இதுவே உண்மையான நிலைமையாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில் எந்தக் கட்சிகள் இருக்கிறது என நான் கூற விரும்பவில்லை. ஆனால் சில கட்சிகள், சில குழுக்கள் இவ்விதமான நிலைப்பாட்டினையே கொண்டிருந்தன.

1977-ல் அரசாங்கம் இப்படியொரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டது. ஏன் அது தவற விட்டது என்பதல்ல இப்போதைய பிரச்சினை. நான் கூறியது போல, அரசாங்கம் அச்சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டது. 1977-ல் மக்களின் பேராதரவு அலையின் மீது அரசாங்கம் வீற்றிருந்த தருணத்தில் அரசின் பால் மக்களின் ஆதரவும், நல்லெண்ணமும் இருந்தது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென அரசாங்கத்துக்கு கால அவகாசம் தர மக்கள் தயாராக இருந்தனர். அவ்வேளையில், அரசாங்கம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தனிப்பு மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அது அதைச் செய்யவில்லை. அது இப்பிரச்சினையை இழுத்தடித்தது.

பின்னர் 1983 ஜூலையில் சிலதுரதிஷ்டவசமான நிலைமைகள் தோன்றின. மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தானாக வந்தது. இப்போது, தனிநாடு கோரிக்கையின் அடிப்படையில் மக்கள் வரம் பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியை நோக்கி, 'நீங்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடும் வரை பேச்சுவார்த்தைக்கு இடமில்லை' எனக் கூறுவது, பேச்சுவார்த்தைகளைத் திறந்து வைக்கும் சாத்தியங்களை இல்லாமற்பண்ணுவதற்கு ஒப்பானதாகும். நீங்கள் பேச்சுவார்த்தைகளை நடாத்த விரும்பினால் உங்களுக்கு எதிர்த்தரப்பிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுடனேயே நீங்கள் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். நீங்கள்தான் அவர்களுக்கு உங்கள் நிலையை எடுத்துரைக்க வேண்டும். வியத்நாம் யுத்தம் உச்சக்கட்டத்திலிருந்த நிலையில், அமெரிக்காவுக்குக் கூட வியத்நாமுடன் சில விஷயங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்துவது சாத்தியமாய் இருந்தது. இவ்வாறான விஷயங்கள் சகஜமானவை. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிவிட்டது எனது உலகுக்குக் காட்ட உங்களுக்கு டி. வி. கமராக்களோ, பத்திரிகை நிருபர்களோ, புகைப்படக்காரர்களோ அவசியமில்லை. அரசாங்கத்துக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற முடியும். வெறுமனே கௌரவப் பிரச்சினையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால், இப்படி எதுவித முயற்சிகளும் நடைபெறவில்லை. நீங்கள் இந்தப் பிடிவாதத்தையும், த. வி. கூட்டணி தனது இறுக்கமான நிலையையும் தொடர்ந்தும் பேணினால், பேச்சுவார்த்தைகள் எதுவுமே நடைபெறாது.

இதன் விளைவு என்னவாகவிருக்கும்? தங்கள் பிராந்தியங்களிலிருந்து அரசாங்கத்துக்கு எதிராகக் கெடுபிடி யுத்தம் தொடுக்கும் ஒரு குறிநோக்கித் தூண்டுதல் பெற்ற - அக்குறிக்கோள் சரியானதா அல்லது தவறானதா என்பது வேறு விஷயம் - மக்கள் பட்டாளத்துக்கு நீங்கள் முகம் கொடுக்க நேரும்.

நான் அறிந்த பிரகாரம், ஜூலைக்குப் பின்னர், அவர்களுக்கான ஆதரவு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது. ஜூலைக்கு முன்னர் நீங்கள் பெற்ற தகவல்களைக் கூட இனிப்பெற முடியாத அளவுக்கு இந்த ஆதரவு வறுத்துள்ளது. இந்நிலையில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நாளாந்தம் தொடர்ந்த யுத்தம் நடைபெறும் அயர்லாந்து நிலவரத்தை அல்லது எல்லையில் சமாதானப் படைகளை வைக்க நிர்ப்பந்தித்துள்ள சைப்பிரஸ் நிலவரத்தை ஒத்த ஒரு நிலையை இங்கும் நீங்கள்

பேணப் பேசுகிறீர்களா? எமது நாடு இந்நிலையைத் தாங்குமா? அதுவும், உங்களுடைய பொருளாதாரக் கொள்கைகளுடன், இந் நிலைக்கு உங்களால் ஈடுகொடுக்க முடியுமா?

இந்நிலையில், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இது பற்றிக் கலந்துரையாடவோ, பேச்சுவார்த்தை நடாத்தவோ, இப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவோ நீங்கள் முன்வரவில்லையென்றால் ஒரு தொடர்ந்த இன அழிப்பு யுத்தத்தை நடாத்திக்கொண்டிருக்க உங்களால் முடியுமா? சர்வதேசரீதியில் நீங்கள் தலைதப்பிக்கொள்வீர்களா? என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் நூல்களைப் பிரசுரிக்கிறீர்கள். 'இதுதான் உண்மை' என்றவாறான பெயர்களில் அழகுறப் பதிப்புப்பெற்ற நூல்களை நான் பார்த்தேன். இதிலொன்றைத் திரு. ஏர்னஸ்ட் கொரியா எழுதியுள்ளார். இதிலுள்ள விஷயமென்னவெனில், வெளியிலிருந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களுக்கு ஒரு நாட்டில் சிறுபான்மையினரின் மீது இயல்பாகவே அனுதாபம் பிறக்கும். அவர்கள் நியாய, அநியாயங்களைப் பற்றிக் கூடப் பார்க்கமாட்டார்கள். பயாஃபிரா பிரச்சினையின் போது நீங்கள் நைஜீரியாவினைப் பார்த்திருந்தால், உங்களில் ஒருவர் கூட இப்பிரச்சினையின் ஆழ அகலங்களை அலசிக் கொண்டிருக்க மாட்டீர்கள். உங்கள் அனுதாபம் பயாஃபிராக்களின் பக்கமே இருந்திருக்கும். எனவே, இந்த விஷயத்தைப் பொறுத்து நடப்பன பற்றியும் வியப்பேதுமில்லை; உலகிலுள்ள மக்கள் அனைவரும் 'நாங்கள் தமிழ் மக்களின் பக்கமே' என்று கூறினாலும் நீங்கள் அதுபற்றிக் கலவரமடையத் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு தனிநாடு வழங்குமாறு உங்களுக்குச் சொல்ல உலகம் விரும்பாவிட்டாலும், அதனது அனுதாபம் தமிழர் பக்கமே இருக்கும். நீங்கள் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால், ஒரு குறிநோக்கித் தூண்டுதல் பெற்ற மக்கள் குழாம் ஒன்றுக்கு எதிராக தொடர்ந்து யுத்தம் நடாத்துவதைத் தவிர உங்களுக்கு வேறு வழியிருக்காது.

இந்நிலையில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இங்கு சுதந்திர பொருளாதாரம் இருந்தாலென்ன, மூடிய பொருளாதாரம் இருந்தாலென்ன, உங்களில் சிலர் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன இறுதியில் நீங்கள் இந்த நாட்டை ஒரு சர்வாதிகாரத்தை– இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கியே தள்ளிவிடுவீர்கள்.

ஆயுதப் படைகள் மத்தியில் இன்றுள்ள நிலை என்ன என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன். இராணுவத்திலும், இதர ஆயுதப்படை

களிலுமுள்ள கீழ்மட்ட அணிகள் என்ன ரீதியில் பேசுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? அவை நூற்றுக்குநூறு அரசாங்கத்தின் பின்னால் நிற்கின்றன என நீங்கள் நினைக்கிறீர்களா? நிலைமை அவ்வாறில்லை. பிரிகேடியர் ஜனாதிபதியின் உறவினர் என்ற ஒரு காரணத்துக்காக முழு இராணுவமும் ஜனாதிபதியின் அல்லது அரசாங்கத்தின் பக்கம் நிற்கிறது என் எண்ண வேண்டாம். நிலைமை முற்றிலும் வேறானது; பலவிதமான சக்திகள் கோதாவில் நிற்கின்றன. நான் இதனை முன்னரும் கூறினேன் - இந்த அரசாங்கத்தின் உள்ளே, இந்த அரசாங்கத்தின் உயர் மட்டத்தில், ஒன்றையொன்று மேவிப்பாய பல்வேறு சக்திகள் முயலுகின்றன. ஆக, நாம் எவ்விதமான ஒரு நிலைமையை அணுகுகின்றோம்? இது ஒரு அபாயகரமான நிலைமை. மேலும் மேலும் பேரினவாதப் பேச்சுக்களைப் பேசுவதன் மூலம் ஒரு பகுதியைத் திருப்திப்படுத்திவிட முடியும் என அரசாங்கம் நினைக்குமாயின், நாம் பெருஞ் சங்கடத்தில் மாட்டிக்கொள்ளப் போகின்றோம். இதனால் தான் அரசாங்கம் விழிப்புடன் இருக்க வேண்டுமென நான் கூறுகிறேன்.

பொருளாதார ரீதியில், நிலவரம் மிக மோசமாக உள்ளது. பண்டவிலைகளைப் பொறுத்தளவில் இன்று நாட்டில் நிலவும் நிலைமை என்ன? கொழும்பில் ஒரு தேங்காய் 5 ரூபா விற்கிறது (குறுக்கீடு). ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் கௌரவ பிரதமர் இரண்டு தேங்காய்ப் பாதிகளைக் கையிலெடுத்துக் கொண்டு நாடு முழுவதுஞ் சென்று 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்த இரண்டு பாதிகளையும் இணைத்து 35 சதத்துக்குத் தருவதாகச் சொன்னார். இன்று ஒரு தேங்காயின் விலை 5 ரூபா. அரிசி, சீனி, பாலுணவு என அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏறியுள்ளன. பஸ்கட்டணங்கள் அதிகரித்துள்ளன. சில பொருட்களின் விலைகள் நாள்தோறும் அதிகரிக்கின்றன. கடைக்குப் போனபிறகுதான் சில பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பது தெரிய வருகிறது. கௌரவ நிதியமைச்சர் வெளிநாடு சென்றுவிட்டார். அடுத்த மாதம் அவர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தாக வேண்டும். புதிதாக வரவு-செலவுத் திட்டம் என ஒன்று தேவையில்லை. ஏற்கனவே எல்லா விலைகளும் ஏறிவிட்டன. சேதப்படுத்தப்பட்ட அனைத்துக்கும் நாங்களே ஈடு கொடுக்கிறோம். நிரந்தரமாகவே கடமையிலமர்த்தப்பட்ட இராணுவத்துடன் கூடியதும், நீண்டு கொண்டே செல்கின்றதுமான அவசரகால நிலைச் செலவினங்களும் எங்கள் தலையில் தான் விழுந்துள்ளன. இதற்கான நிதி மக்களிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றது! இதுதான் இன்றைய நிலைமை.

105836

இவ்விஷயம் பற்றி நீங்கள் சிரத்தையுடன் சிந்திக்கிறீர்களா என நான் உங்களைக் கேட்கிறேன். 'இல்லை, நீங்கள் அதைக் கைவிட்டால் தான், நாங்கள் உங்களுடன் பேசுவோம்' நீங்கள் சொல்ல, 'இல்லை, நாங்கள் மதராஸில் இருக்கிறோம், உங்களுடன் எங்களுக்கு பேசமுடியாது' என அவர்கள் சொல்ல-இதில் எவருக்குமே ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை! ஐயா, இதற்கான பொறுப்பு முழுவதும் அரசாங்கத்தைச் சார்ந்ததே. இந்நாட்டிலுள்ள மக்களுக்கு வேலைகளையும், ஒரு நல்ல வாழ்க்கை நிலையையும், நீதியான பொருள் விலைகளையும் உத்தரவாதப் படுத்த வேண்டியது அரசாங்கமே. ஆனால், இவையெதுவுமே இன்று இருப்பதாகத் தெரியவில்லை, அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் உங்களுடைய அபிவிருத்தித் திட்டம் முழுவதும் பாழாகிவிடும் என நான் ஹேஷ்யம் கூறுகிறேன். ஏனெனில், உங்களுக்குக் கிடைக்கும் நிதிவளத்தை நீங்கள் முகம் கொடுக்கவுள்ள யுத்தத்துக்கே அன்றி அபிவிருத்திக்கு நீங்கள் பயன்படுத்தப் போவதில்லை. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் முனைப்படையும். நாட்டில் இத்தகைய ஒரு நிலைமைதான் உருவாகும் (குறுக்கீடு) இப்போது உங்களிற் சிலர் பேசத்தான் செய்வீர்கள். வெகுவிரைவில் இன்னும் சில இடைத்தேர்தல்கள் நடைபெறவுள்ளன. வேண்டுமானால், தொகுதிகளின் பெயர்களைச் சொல்லவும் என்னால் முடியும். எனவே பேசாமலிருங்கள்! (குறுக்கீடு). சில சமயம், கலவானைத் தொகுதியும் இருக்கக் கூடும். ஆனால், அதைப் பொறுத்தளவில் வேறொரு முறை பின்பற்றப்படும். நான் கூறும் இடைத்தேர்தல்கள் கட்சியின் செயலாளர் நாயகத்திடம் கையளித்த கடிதங்கள் வாயிலாக நடைபெறப்போவன. மேலும் சில கடிதங்கள் அடுத்த மாதம் கையளிக்கப்படவுள்ளன. எனவே, நீங்கள் அதிகம் சத்தம் போடாமல் இருங்கள். ஏனெனில், கையளிக்கப்படவுள்ள கடிதங்களின் எண்ணிக்கை அதிகரிக்க இடமுண்டு. என்ன நடக்கப் போகிறதென்பது உங்களுக்குத் தெரியாது! வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறவுள்ள தேர்தல்களுடன், தெற்கிலும் சில இடைத்தேர்தல்கள் நடைபெறும். மாத்தளை மாவட்டத்தில் ஒன்றும், அனுராதபுர மாவட்டத்தில் ஒன்றும், மொனராகல மாவட்டத்தில் ஒன்றும் நடைபெறும் (குறுக்கீடு). ஆக, இது தான் நிலைமை.

விஷயங்கள் இவ்வாறே நடந்து கொண்டு போனால், இடைத்தேர்தல்கள் முக்கிய பிரச்சினையாக இருக்காது நான் குறிப்பிட்டது போல, கட்சிப் பற்றற்ற ஒரு ஜனாதிபதி பற்றி திரு ஆரியரத்ன காணும் கனவு நனவாகி ஒரு இராணுவ சர்வாதிகாரம் எம்மீது திணிக்கப்படும்.

PUBLIC LIBRARY JAFFNA.

ஐயா, தற்போது, நான் வேறு சில விஷயங்கள் பற்றிப் பேச விரும்புகிறேன். இதில் ஒன்று 1983 ஜூலையில் சிலர் இறந்தும், அவர்களின் இறப்பு குஜப்படுத்தப்படாதிருப்பது பற்றிய பிரச்சினை. இறந்த சடலங்கள் இனங்காணப்படவில்லை; இவைபற்றி மரண விசாரணைகளும் நடாத்தப்படவில்லை. இவர்களிற் சிலர் அரசாங்க ஊழியர்கள். இவர்களின் மனைவிமாரும், பிள்ளைகளும், விதவைகள், அநாதைகள் பென்ஷன் பெறத் தகுதியுள்ளவர்கள். துரதிஷ்ட வசமாக, சட்டம் இன்றிருக்கும் நிலையில், இறப்பு ருஜுப்படுத்தப்படாத பட்சத்தில், காணாமல் போன ஒருவர் 7 ஆண்டுகளுக்கு உயிருடன் இருப்பவராகவே கருதப்படுவார். எனவே, சம்பந்தப்பட்ட உறவினர்களுக்குப் பென்ஷன் வழங்கப்பட மாட்டாது. காப்புறுதி செய்திருந்தால் கூட, அப்பணத்தைப் பெறுவதற்கும் வழி இல்லை. எதுவுமே செய்ய முடியாது.

இழப்பீடு கோரி விண்ணப்பித்துள்ளவர்கள் மத்தியிலிருக்கக் கூடிய சில விசேஷ 'கேஸ்'களை கவனத்துடன் பரிசீலிக்குமாறு நான் அரசாங்கத்திடம் கோருகின்றேன். ஜூலை 29-ந் திக ஒரு ஜீப்வண்டியில் சென்ற ஆறு பேர்களைப் பற்றிய ஒரு துயரக் கதை இது. இந்த ஜீப் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானது. அதன் சாரதி ஒரு சிங்களவர். அது துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த ஒரு பொறியியலாளரின் பாவனைக்காக எடுக்கப்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக, அது ஒரு உத்தியோகப்பற்ற பயணம். இப்படி எத்தனையோ உத்தியோகப்பற்ற தேவைகளுக்கு அரச வாகனங்கள் பயன்படுகின்றன. அதனால், இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. இந்த உத்தியோகப்பற்றற் சவாரியின் போது, குறிப்பிட்ட பொறியியலாளர் இந்துக் கல்லூரி அகதிகள் முகாமிலிருந்து நான்கு பேரை ஏற்றிக் கொண்டு இவர்களின் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிப் பார்வையிட கிரிலப்பனைக்கும் அத்திடியவுக்கும் சென்றார். பெண்களையும் குழந்தைகளையும் முகாமில் விட்டு விட்டு, ஆண்கள் மட்டுமே ஜீப்பில் சென்றனர். இது கொழும்பினுள் 'புலி'கள் புகுந்துவிட்டனர் என்று கூறப்பட்ட தினத்திலேயே—ஜூலை 29-ந் திகதியன்று நடைபெற்றது. அவர்கள் இப்பயணம் சென்று திரும்பும் போது அத்திடியவில் ஜீப் நிறுத்தப்பட்டது. சாரதி தான் சிங்களவர் எனக் கூறி ஒருவாறு தப்பித்துக் கொண்டார். மற்றையோர் ஜீப்புடன் சேர்த்துக் கொழுத்தப்பட்டனர். இவர்களில் இருவர் உள்நாட்டு இறைவரி இலாக்காவில் முன்னர் மதிப்பீட்டதிகாரிகளாகக் கடமையாற்றியவர்கள். ஒருவர் மேற்படி இலாக்காவில் அவ்வேளையில் மதிப்பீட்டதிகாரியாக கடமை புரிந்தவர்; இன்னொருவர் துறைமுக அதி

காரசபையைச் சாந்த பொறியியலாளர்; அடுத்தவர் மேற்குறிப்பிட்ட ஒரு வரின் மருமகன்—அவர் மாணவர். இதில் மாண்ட நான்கு பேர்களின் குடும்பங்கள் அரசிடமிருந்து பென்ஷன் பெறத் தகுதியுடையன.

துரதிஷ்டவசமாக, ஜீப்பில் சாரதி நடந்த இந்தக்கதையை வெளியே சொல்லப் பயந்து கொண்டிருந்தார்; காரணம் அவர் சென்ற பயணம் உத்தியோகப் பற்றற்றது என்பதால். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சார்ந்த ஒருவர் சடலங்களை அடையாளங் காண சவச் சாலைக்குச் சென்றிருந்தார். ஆனுல், ஒரு சடலம் மிகவும் கருகி இருந்ததால் அவரால் அதைத் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியவில்லை. இறந்தவர்களின் உறவினர்கள் இதுபற்றி ஜனுதிபதிக்கு கடிதமூலம் தொடர்பு கொண்டிருந்தார்கள். இவர்களின் விஷயம் பற்றி விஷேட அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், ஒரு மரண விசாரணை வாயிலாகவோ, அல்லது மரணச் சான்றிதழ் மூலமாகவோ இந்த இறப்புக்களை அத்தாட்சிப் படுத்த முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர். ஆனுல், அவர்கள் தமது தற்போதைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு பென்ஷன் வாயிலாகவோ அல்லது வேறு மார்க்கமாகவோ இவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்பட வேண்டும்.

ஐயா, அடுத்து நான் தடுப்புக் காவலில் வைத்திருப்பவர்கள் தொடர்பான பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். கடந்த தடவையும் நாம் இப் பிரச்சினையை எழுப்பினேம். கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடை நீக்கப்பட்டது. கட்சி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணி, நவலங்கா சமசமாஜக் கட்சி, ஆகியவற்றின் மீதான தடை தொடர்ந்தும் இருக்கிறது. மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும், இக் கட்சிகள் என்ன செய்தன என்பது பற்றியோ, அவற்றின் சம்பந்தம் பற்றியோ ஒரு வார்த்தை கூட இதுவரை சொல்லப்படவில்லை. நீங்கள் நடத்துகின்ற அல்லது நடத்த உத்தேசித்திருக்கின்ற பேச்சுவார்த்தைகளினது தன்மையின் பொருட்டும், இந் நாட்டில் ஜனநாயக வாழ்வு சகஜ நிலைக்கு மீட்கப்படுவதன் நலன்களின் பேரிலும் இக் கட்சிகள் மீதான தடை நீக்கப் பட்டாக வேண்டும் என நான் கருதுகிறேன்.

அடுத்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலரின் பிரச்சினை பற்றி இப்போது பேசுகிறேன். இக் கட்சிகள் பற்றிச் சொல்லுவதற்கு உங்களிடம் எதுவுமில்லை. ஒரு நீதிமன்ற வழக்கு வாயிலா

கவும் உங்களால் எதையும் ருஜீபடுத்த முடியாது என எனக்கு நிச்சயம் தெரியும்; எவரைப் பற்றியாவது நீங்கள் சந்தேகப்படலாம். ஒரு நாளில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் நிஜத்தில் நியாயப்படுத்த முடியாதவை என அடுத்த நாளே நீங்கள் கண்டு கொள்கிறீர்கள். எனவே, அவற்றுக்கு எதிராக எதுவுமே இல்லையென்பதால் தம் மீதான தடையை நீக்கக் கோரும் உரிமை அவற்றுக்கு உண்டு. பெருமளவு பேர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எல்லோருடைய கதியும் ஒரே கதிதான் ஆனலும், சிலரது நிலை மிகப் பரிதாபகரமானது. அவர்களுக்கு எதிராகச் சொல்ல எதுவுமே இல்லை.

சமரவிக்ரம என்றபேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இறுதி ஆண்டு மாணவர் தடுப்புக் காவலில் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இத் தகவல் மிக நம்பகரமானது என நான் கூறுவேன். மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புள்ள ஒரு உதவி விரிவுரையாளரைத் தேடிச் சென்ற பொலீசார், அவரைக் கண்டு பிடிக்க முடியாது போகவே, இந்த மாணவர் சமரவிக்கிரமாவைக் கைது செய்தனர். அவர் இப்போது நீர்கொழுப்பு சிறைச்சாலையில் இருந்து அவஸ்தைப் படுகிறார்! இவருக்கு எதிரான விசாரணைகள் எப்போதோ முடிந்துவிட்டன; இவருக்கு எதிராக இம்மியளவு சாட்சியம் கூட இல்லை.

தான் சிறைச்சாலையில் இறுதியாண்டுப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருப்பதாக இவர் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார். இவர் ஒரு வறிய குடும்பத்தைச் சாந்தவர்; வீணே ஒரு ஆண்டைத் தவற விடுவது இவருக்குக் கட்டுப்படியாகாது. இவர் நீர்கொழும்புச் சிறையிலிருந்து தமது பாடங்களைப் படிக்க முயலுகிறார். அங்கிருந்து படிப்பது சாத்தியமில்லாத விஷயம். அங்குள்ள நிலைமைகள் பற்றி நான் அறிந்துள்ளேன். இருப்பினும், தான் அங்கிருந்து படிப்பதாகவும், காவலர் சகிதமாக வந்தாவது தன்னை இறுதியாண்டுப் பரீட்சை எழுத அனுமதிக்குமாறு அவர் அதிகாரிகளைக் கேட்டுள்ளார். நான் இவரின் விஷயத்தை இங்கு விசேஷமாகச் சுட்டிக்காட்டுவதற்கான காரணம் யாதெனில் சி. ஐ. டி. விசாரணைகளின் போது இவருக்கு எதிரான சாட்சியம் எதுவுமே கண்டுபிடிக்கப்படவில்லை என்பது தான். இந்த மாணவரின் நிலையை விசேஷ கரிசனையுடன் பரிசீலித்து, அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு நான் உள்நாட்டுப் பாதுகாப்பமைச்சரை அல்லது இங்குள்ள வேறு யாரையாவது வேண்டிக் கொள்கிறேன்.

இது போன்ற பலர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருந்த போது திலும், அவை எல்லாவற்றையும் இங்கு நான் அணுகப் போவதில்லை. இவர் சம்பந்தப்பட்ட விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். இவற்றுள்ள ஒன்று திரு. பிரின்ஸ் குணசேகர தொடர்பான விஷயமாகும். உங்களிற் பலருக்கு அவரை நீண்ட காலமாகத் தெரியும். ஜூலை சம்பவங்களில் திரு. பிரின்ஸ் குணசேகராவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தம் இருக்கிறது என யாருக்காவது கூற முடியும் என நீங்கள் கருதினால், அவர் இருந்தாற் போல புதிய பிறவி எடுத்திருக்க வேண்டும் என்றே நான் சொல்லுவேன். அவருடைய அரசியலுடன் நான் இணக்கம் கொள்வது வெகு அரிது. ஆனால், நிச்சயமாக அவர் வன்செயற் பாங்கான நடைமுறையில் இறங்கக் கூடிய ஒருவரல்ல.

அவருக்கெதிரான ஏதாவது சாட்சியங்கள் உங்கள் வசம் உள்ளதா என்பது பற்றி நானறியேன். எனக்கென்றால் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அவருக்கு எதிராக எதுவுமே இல்லை என்பதே எனது கருத்து. அவர் சில ம. வி. முன்னணிக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார் என்பதும், சில ம. வி. முன்னணி உறுப்பினர்களுடன் மதவாச்சி நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்திக்க அவர் சென்றார் என்பதும் மட்டுமே நான் அறிந்தவை. அவருக்கு எதிராகச் சொல்லக் கூடியவை அவ்வளவுதான்.

அடுத்தது சிங்க றெஜிமென்ட்டில் லெப்டினண்ட் கேணலாக விருந்த திரு. பிரசன்ன தஹநாயக்க பற்றிய பிரச்சினை இவரது விஷயத்தைப் பொறுத்தளவில், ஜனாதிபதித் தேர்தலின் போது இவர் திரு. கொப்பக்கடுவின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர். நான் அறிந்தவரையில், அவர் செய்ததெல்லாம் இதுதான். அவரைத் தடுப்புக் காவலில் வைக்க இது மட்டும் போதும் என நீங்கள் கருதியிருக்கலாம். ஆனால், மூன்று மாதத்துக்கும் மேற்பட்ட காலமாக தடுப்பில் வைத்திருக்க இது மட்டும் போதாது.

உண்மையில் திரு. கொப்பக்கடுவவுடன் நாடெங்கும் சென்ற இன்னொருவர் இருக்கிறார். விஜயரத்ன என்பவர் அவர். அவரும் இராணுவத்தில் லெப்டினண்டாக இருந்தவர். இவரும் கைது செய்யப்பட்டு 19 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். (குறுக்கீடு) அவர் களு விஜேகளு லக்கியல்ல. களு லக்கி களு விஜேயைக் காட்டிலும் அதிருஷ்டக்கார். அவர் 19 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுப் பின்னம் விடுதலை செய்யப்பட்டார்.

KOHA-JPL

அடுத்து, ஸ்ரீ. ல. சு. கட்சியின் ஆனமடுவத் தொகுதி அமைப்பாளர் திரு. தேவபண்டார சேனரத்ன பற்றிய பிரச்சினை. இவருக்கு எதிராகக் கூறுவதற்கு எதுவுமே இல்லை. அடுத்த மஹரகமவைச் சார்ந்த சரத் சந்திரசிறி பற்றியது. இவர் பற்றிய விஷயம் எனது நண்பரால் சென்ற தடவையும் எழுப்பப்பட்டது. இவர் செய்த ஒரே பாவம் கடந்த இடைத் தேர்தலில் திரு. தினேஷ் குணவர்தனவுக்கு ஆதரவாக வேலை செய்தது மட்டுமே. இதே போன்றது தான் ஜாஎலவைச் சார்ந்த டேவிட் சேகரகேயின் பிரச்சினையும்.

ஒரு உறுப்பினர்:-

சோமபால அமரகீர்த்தி

திரு. சரத் முத்தெட்டுவேகம:-

வேறு ஸ்ரீ. ல. சு, க. அமைப்பாளர்கள் பலர் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றியும் ஸ்ரீ. ல. சு. க. உறுப்பினர்கள் கூறுகின்றனர், ஆக, அவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். பெஜட் வீதி மூடப்பட்ட பின்னர், தடுத்துவைக்க வேறு இடமும் இல்லை. அதிருஷ்டமுள்ள சிலர் சி. ஐ. டி. தலைமையகத்தின் முதல் மாடியில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு அறையாவது இருக்கிறது. மற்றவர்கள் நீர்கொழும்புச் சிறையில் கொள்ளைக்காரர்கள், கசிப்பு வியாபாரிகள் முதலான குற்றவாளிகளுடன் ஒன்றாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்த இடம் மிகவும் மோசமான ஒரு நிலையிலிருக்கிறது. அங்கு போனால் அதைவிட வேறு தண்டனை தேவையில்லை. அந்த இடத்தில் ஒருவரை மூன்று மாதங்கள் வைத்திருந்தால் போதும். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஒரு சிறிய அறையில் இன்னும் 11 பேருடன் வைக்கப்பட்டிருந்தனர். திறந்த மலசல கூடத்திலிருந்து வீசும் துர்நாற்றம் அந்த அறையை நிறைத்திருக்கும். ஒவ்வொரு நாளும் 2 மணிநேரம் மட்டுமே அவர்கள் அறைக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். குற்றவாளிகளான அல்லது ரிமாண்டிலுள்ள சிறைக்கைதிகள் அனுபவிக்கும் உரிமைகளைக் கூட இவர்களுக்கு இல்லை. அவசரகாலப் பிரமாணங்களினது 18-வது பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் கூட இவர்களுக்கு இல்லை. 18-வது பிரிவின் கீழ் அவர்கள் விசேஷராம். வெளிநாட்டுக் கைகள் பற்றியும் இடதுசாரிக் கட்சிகள் பற்றியுமான அந்த பழைய கதைகளில் அரசாங்கம் இன்னும் கடுஞ் சிரத்தை காட்டுகிறதா என நான் அரசாங்கத்தைக் கேட்க

விரும்புகிறேன். அக்கதைகள் கலவரம்மிக்க அந்த நாட்களுக்குத் தோதானவையாக இருந்திருக்கலாம். இப்போது எல்லாம் முடிந்து விட்டது. நீங்கள் குறைந்த பட்சம் செய்யக் கூடியதெல்லாம் இவர்களை விடுதலை செய்வதும், நீங்கள் விட்ட தவறுக்காக இவர்களிடம் மன்னிப்புக் கோருவதுமே. தவறுகளை எவரும் விடமுடியும்.

1962-ல் சதிப்புரட்சி விசாரணைகள் நடந்த தருணம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்போது யட்டியாந்தோட்டை எம். பியாக இருந்த கலாநிதி என். எம். பெரேரா, அன்று அமைச்சராக இருந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மீது ஒரு குற்றச்சாட்டினைச் சுமத்தினார். 'இங்கு ஒரு சதி மட்டுமல்ல, பல சதிகள் உள்ளன; ஒரு சதியினுள் இன்னொரு சதியுள்ளது' என ஆரம்பித்த கலாநிதி பெரேரா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைச் சுட்டிக்காட்டி, பின்வருமாறு கூறினார். 'ஒரு சதியினுள் இன்னொரு சதியை உருவாக்கும் மனிதர் நீர்தான்'. பின்னர் தமக்குக் கிடைத்த தகவலின் பேரிலோ என்னவோ, தாம் கூறியது தவறு என்பதை உணர்ந்த கலாநிதி பெரேரா பேரவையின் முன்னால் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் மன்னிப்புக் கோரினார்.

நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் நான்கு முக்கிய உறுப்பினர்களைக் கைது செய்து, கம்யூனிஸ்ட் கட்சியையும் தடைசெய்து விட்டு, ஜூலை சம்பவங்களில் எமக்கும் சம்பந்தம் உண்டு என நீங்கள் கூறினீர்கள். இப்போது, அவர்களை விடுதலை செய்துள்ளீர்கள்; கட்சி மீதான தடையையும் நீக்கிவிட்டிருக்கிறீர்கள்! ஆனால், இது பற்றி ஒரு வார்த்தை கூறவில்லை! மற்றைய கட்சிகளைப் பொறுத்தளவிலும் இதுதான் விஷயம். அவர்களையும் ஒரு நாள் நீங்கள் விடுதலை செய்தே ஆகவேண்டும்; அதை விரைவில் செய்வது நல்லது. ஏனெனில், எவருக்கும் எதிராக எதுவும் இல்லை.

ஒரு அலாதி ரகமாக யூ. என். பிக்காரர், லிபரல் ஜனநாயக கவுன்சிலைச் சார்ந்த அஸிதா பெரேரா என்பவர் விடுத்திருந்த ஒரு அறிக்கையை நான் பார்த்தேன். இவர்களை யூ. என். பிக்காரர் என யூ. என். பி. அங்கீகரிக்குமோ என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஏனெனில், அண்மையில் நடைபெற்ற மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு உட்பட சில விஷயங்களில் அவர்களுக்குச் சுயேச்சையான கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயினும், லிபரல் ஜனநாயக கவுன்சிலின் தலைவர்களில் ஒருவரான திரு. அஸித்த பெரேரா, ஜூலை சம்பவங்

களுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை ஆராய உயர் நீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களைக் கொண்ட ஒரு சுயாதீனமான கமிஷன் நியமிக்கப்படவேண்டும் எனக் கேட்டுள்ளார். நீதி சேவைக் கமிஷனின் சட்டங்களின் கீழ், உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஒரு கமிஷனை நியமிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா என நான் கேட்க விரும்புகிறேன். 1983 ஜூலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களும் அதனை இயக்கியவர்களும் யார் என்பதை அறியும் பொருட்டு இத்தகைய ஒரு கமிஷனை நியமிக்க நீங்கள் தயாராயிருக்கிறீர்களா? நான் இதனை இச்சபையில் முன்பும் கூறியிருந்தேன். நிர்வாகத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வினக்கொத்து பற்றி நான் முன்னர் குறிப்பிட்டேன். அந்த வினக்கொத்திலிருந்த 'நீங்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்?' என்ற கேள்விற்கு பதிலளித்த தடுப்புக் கைதிகளில் 80 சதவீதமானோர் யூ. என். பியைச் சார்ந்தவர்கள் அல்லது அதன் ஆதரவாளர்கள். வாக்குச்சாவடி பற்றியும், பிரதான குடியிருப்பாளர் பற்றியும் வினவிய அந்த மிக அந்தரங்கமான வினக்கொத்து எங்கே?

அதை என்ன செய்தீர்கள்? நான் உங்களைக் கேட்கிறேன்—இந்த வினக்கொத்துக்கு அளிக்கப்பட்ட விடைகளை, குறைந்தபட்சம், 'நீங்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்' என்ற அந்த ஒரு கேள்விக்கு அளித்த விடைகளை வெளியிட உங்களால் முடியுமா? ஏனெனில், 80 சதவீதமானோர் யூ. என். பியைச் சார்ந்தவர்கள். சிலர் கோருவது போல ஐ. நா. விலிருந்தல்ல—இங்கு நிஜத்தில் சுயாதீனமான ஒரு கமிஷனை அமைக்குமாறு நான் உங்களுக்கு, அரசாங்கத்துக்குச் சவால் விடுகின்றேன். நாம் பொது நலவமைப்பு நாடாளுமன்றச் சங்கத்தின் அல்லது ஐ. நா. வின் அல்லது சர்வதேச ஜூரிகள் சங்கத்தின் கமிஷன் வேண்டுமென்று கேட்கவில்லை. இலங்கையில் ஒரு கமிஷனை நியமியுங்கள். 1983 ஜூலை சம்பவங்களுக்கு ஜவாப்தாரிகள் யார் என்பதை ஆராய உங்களால் சில உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க முடியும். ஆனால், நீங்கள் இதை ஒரு போதும் செய்யமாட்டீர்கள். ஏனெனில், நீங்கள் இவ்வாறு செய்தால், கமிஷன் உங்களையும் அரசாங்கத்தையுமே குற்றவாளிகளாகக் காணும். இதனால் தான் மக்களைக் கைது செய்வதாலும், கட்சிகளைத் தடை செய்வதாலும், மக்களைச் சிறையிலடைப்பதாலும் எதுவித பயனுமில்லை என நான் கூறுகிறேன்.

இப்போது உங்கள் சொந்த ஆதரவாளர்களே-திரு. அஸித்தபெரேரா (லிபரல் ஜனநாயககவுன்சில்) கமிஷன்வேண்டும் எனக்கேட்கிறார்கள்; நாங்கள்கேட்கிறோம்; உலகமக்கள்கேட்கிறார்கள். இச்சம்பவங்களுக்கு பொறுப்

KOHA
JPL



பாளிகள் யார்? என்பதை அறிய அட்டர்னி-ஜெனரல் இலாக்காவின் பங்கெடுப்புடன் ஒரு கமிஷனை நியமியுங்கள். இது போல ஒரு கமிஷனை—சன்சோனி கமிஷனை—அமைத்தவர்கள் நீங்களே. ஆனால், இதை நீங்கள் ஒரு பொழுதும் செய்ய மாட்டீர்கள். ஏனெனில் நீங்களும், உங்கள் ஆதரவாளர்களும் குற்றவாளிகள். அந்த இரு விஷயங்களைப் பற்றி நான் கூறுவது அல்வளவு தான்.

இன்னுமொரு விஷயம் இருக்கிறது. உண்மையில் அதற்கும் ஏற்கனவே பேசியவற்றுக்கும் சம்பந்தமில்லை. இது தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அலுவலகங்கள் தொடர்பானது. அரசாங்கத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு அலுவலகங்கள் வழங்கப்பட்டிருந்தன. 1980 ஜூலை வேலை நிறுத்தத்தையும் அத்தியாவசிய சேவை ஆக்ஞையையும் தொடர்ந்து இந்த உரிமை ரத்துச் செய்யப்பட்டது. இது உண்மையில் பொது நிர்வாக அமைச்சுடன் தொடர்புபட்ட விஷயம். இப்போது வேலையிழந்த பலருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டிருக்கிறது. சங்கங்கள் இயங்குகின்றன. ஆனாம், அவற்றின் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. இந்தச் சங்கங்களுக்கு மீண்டும் அவற்றின் அலுவலகங்களை வழங்குமாறு நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். உதாரணமாக, நில அளவைத் திணைக்களத்தில், சங்கத்தின் பொதுச் செயலாளர் தவிர மற்றெல்லோரும் வேலைக்குத் திரும்பியுள்ளார். ஆனால், அவர்களின் சங்க அலுவலகம் இன்னும் மூடப்பட்டுள்ளது. இதர அரசாங்கத் திணைக்களங்களிலும் இதே நிலைதான். கௌரவ பொது நிர்வாகத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களின் இந்த அலுவலகங்களை மீண்டும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது பல்கலைக்கழக வளாகங்களில் உருவாகிவரும் நிலைமை தொடர்பான பிரச்சினை. கௌரவ துணை உயர்கல்வி அமைச்சர் இங்கு வரவில்லையெனத் தெரிகிறது. வளாகங்களில் நடந்துள்ளது இதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழுள்ள சமவாதி மாணவர் சங்கம் என்ற சங்கம் பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேரவுள்ள மாணவர்கள் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. இச்சுற்றறிக்கையை வாசித்து அதில் கைச்சாத்திட்டு அனுப்புமாறு மாணவர்களில் இதில் கேட்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகம் நிஜத்தில் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் பல்கலைக்கழகத்தின் 'மூல ஆரம்பம்' ஒன்று இருக்கும் என எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இந்த 'மூல ஆரம்பத்

KOHA JPL

தின் போது மாணவர்கள் அழைக்கப்பட்டு சமவாதி மாணவர் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளனர். பின்னர், இச்சங்கம் பல்கலைக்கழகங்களை சரியான தர்மிஷ்ட வழியில் நடாத்துவது பற்றி மாணவர்களுக்கு அறிவு கொழுத்துமாம் (குறுக்கீடு). நான் இந்த சுற்றறிக்கைப் பார்த்தேன்.

ஒரு உறுப்பினர்:-

எங்கிருந்து நீர் அதைப் பெற்றீர்?

திரு. சரத் முத்தெட்டுவேகம:-

சமவாதி மாணவர் சங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு இச்சுற்றறிக்கை மாணவர்களைக் கோருகிறது. உதாரணத்துக்கு, திரு. கருணஸேன கொடித்துவக்கு வளாகத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மாணவர்கள் வருமுன்னரே அங்கு பொலீஸாரையும் ஆயுதப் படைகளையும் வருவிப்பதில் அவர் ஈடுபட்டுள்ளார். இவையாவும் ஒரு சதி அல்லது சர்வாதிகாரத்துக்கான எத்தனிப்பு பற்றிக் கட்டியங் கூறுவனவாகவே உள்ளன. தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர்; சிறுபான்மையினர் அபாயத்துக்குட்பட்டுள்ளனர்; மாணவர்கள் மீது நிர்ப்பந்தம் கொண்டுவரப்படுகிறது. இதுதான் இன்றைய நிலைமை. பல்கலைக் கழகங்கள் இராணுவ முகாம்களைப் போலன்றிப் பல்கலைக்கழகங்களாகவே இயங்குவதை துணை உயர்கல்வி அமைச்சர் உத்தரவாதப்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

335.4 C.C

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

1983 ஜுலை மாதம் இடம் பெற்ற இனக் கலவரங்கள் சம்பந்தமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சரத்முத்தெட்டுவேகம இலங்கைப் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய இரு உரைகள் இப் பிரசுரத்தில் அடங்கியுள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மீது விதிக்கப்பட்ட தடை இனக் கலவரங்கள் போன்ற அம்சங்கள் இதில் இடித்துரைக்கப் பட்டுள்ளன.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

1983 செப்டம்பர் 22; அக்டோபர் 20-ம். திகதிகளில் பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கைகளின் திருத்தப்படாத பிரதிகளிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டது.

**அன்பளிப்பு ரூபா 3-00**

கொழும்பு-5 இல 50/7, சிறிபா வீதி இல்லத்தில் குடியிருக்கும் சரத் முத்தெட்டுவேகம என்னும் என்னால் யாழ். ஆஸ்பத்திரி வீதி 217-ம் இலக்க "புது யுக" அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது.